Registered as a news paper.

பக்கங்கள்: பத்து

விலை: ரூபா 6.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

IIS இன்
கணனிக் கற்கைநெறிகளுக்கான
மாபெரும் புலமைப்பரிசில்திட்டம்-2003

விபரங்களும் விண்ணப்பப்படிவங்களும் IIS அலுவலகங்களில் பெற்றுக்கொள்ளலாம்

விண்ணப்ப முடிவுத் திகதி : 15.11.2002

சந்தர்ப்பத்தை தவறவிடாதீர்கள் !
கணனிக்கல்விக்கு தனித்துவம் மிக்க IIS நிறுவனத்தில் இணைவதனூடாக கணனி உலகில் நீங்கள் அங்கீகரிக்கப்படுகின்றீர்கள்.

மலர் : 01 திருவள்ளுவர் ஆண்டு: 2033 ஐப்பசி 23 ஆம் நாள், ஹிஜ்ரி 1423 றமழான் 03 (09.11.2002) சனிக்கிழமை இதழ் : 40





# நீதிமன்றத் தீர்ப்பைக் கண்டித்து திரண்டெழுந்தது யாழ்.குடாநாடு!



## உணர்ச்சி வெள்ளமாய் மக்கள் பேரணி

(யாழ்ப்பாணம்)

**தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வே. பிரபாகரன் மீதான நீதி மன்றத் தீர்ப்பைக் கண்டித்து யாழ்.நகரில் நேற்று பல்லாயிரம் மக்கள் திரண்ட மாபெரும் கண்டனப் பேரணி நடைபெற்றது.**

யாழ்.மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றியம் ஏற்பாடு செய்திருந்த மேற்படி கண்டனப் பேரணியில் பல்லாயிரக்கணக்கான மக்கள் திரண்டு விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரன் மீதான மேல் நீதிமன்றத் தீர்ப்பைக் கண்டித்து மிகவும் ஆக்ரோஷமாக ஆர்ப்பாட்டம் செய்து தமது கண்டனத்தை வெளிப்படுத்தினார்கள்.

பாடசாலை மாணவர்கள், பல்கலைக்கழக மாணவர்கள், கல்விசார் சமூகத்தினர், அரசு, அரச சார்பற்ற ஊழியர்கள் மற்றும் பொதுமக்கள் ஆகியோர் இணைந்து மேற்படி

(10ஆம் பக்கம் பார்க்க)

## யாழ்.நகர் வெறிச்சோடியது

(யாழ்ப்பாணம்)

தேசியத்தலைவர் வே.பிரபாகரனுக்கு வழங்கப்பட்ட நீதிமன்றத் தீர்ப்பினைக் கண்டித்து நேற்று யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற கண்டனப் பேரணியால் நகரம் வெறிச்சோடிக்காணப்பட்டது.

நேற்று வர்த்தக நிலையங்கள், தனியார் கல்வி நிலையங்கள், உள்ளூர் போக்குவரத்துச் சேவைகள் அனைத்தும் தமது வழமையான சேவைகளில் ஈடுபடாமையினாலே முழு யாழ்.குடாநாடுமே ஸ்தம்பித்தது. (25)

### விண்ணாணம் விநாசியர்



மக்களிண்ட தீர்ப்புத்தான் சரியான தீர்ப்புக் கண்டியளோ....

## யசுகி அகாஷி — தமிழ்ச்செல்வன் கிளிநொச்சியில் நேற்று சந்திப்பு

(கிளிநொச்சி)

ஜப்பானிய அரசின் விசேட பிரதிநிதி யசுகி அகாஷி, நேற்றுக் காலை கிளிநொச்சி அரசியற்துறை பணியகத்தில், விடுதலைப்புலிகளின் அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வனை சந்தித்துப் பேச்சுக்களை நடத்தியுள்ளார். இப் பேச்சுக்களில் சமாதான நடவடிக்கைகள் மற்றும் வடக்கு கிழக்கு அபிவிருத்திக்கான ஜப்பா னிய உதவி என்பன குறித்து ஆராயப்பட்டது.

காலை 9.30 மணிமுதல் 11.30

(10ஆம் பக்கம் பார்க்க)

## உரத்துக் கிளம்பிய கோஷங்கள்




(யாழ்ப்பாணம்)

"மொழியும் மண்ணும் விழியென்றால் தலைவன் எங்கள் உயிரன்றோ" இது நேற்றைய கண்டனப் பேரணியின் போது பொதுமக்கள் தாங்கி சென்ற சுலோக அட்டைகளில் காணப்பட்ட சுலோகங்களில் ஒன்று.

இப்பேரணியின் போது "சிறிலங்கா அரசே எம் தேசத்தலைவருக்கு தண்டனை கொடுக்க நீ யார்", "பேச்சைக் குலைக்கும் உன் தீர்ப்பு நம் தமிழரின் நெஞ்சினில் நெருப்பு", "அரசே காரியம் கை கூடும் நேரத்தில் கணக்கு விடாதே", "உலகத் தலைவர் வரிசையில் எம் பிரபாவிற்கு முதலிடம்", "சர்வ தேசமே எங்களுடன் விளையாடாதே" போன்ற கோஷங்களைத்

(10ஆம் பக்கம் பார்க்க)

## சர்வதேச நிதியைக் கையாள வட-கிழக்கு அபிவிருத்தி நிதியம்

### செய்தியாளர் மாநாட்டில் சு.ப.தமிழ்ச்செல்வன்

(கிளிநொச்சி)

வட-கிழக்குப் பகுதிகளில் மேற்கொள்ளப்படவிருக்கும் அபிவிருத்தி மற்றும் புனர்வாழ்வு நடவடிக்கைகளுக்கான நிதியைக் கையாள்வதற்கும், கண்காணிப்பதற்குமாக 'வட கிழக்கு அபிவிருத்தி நிதியம்' ஒன்று உருவாக்கப்படவிருக்கிறது. இவ்வாறு விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் தெரிவித்தார்.

தாய்லாந் திலிருந்து திரும்பிய பின்னர் வன்னிப் பகுதிக்கு நேற்று விஜயம் செய்த ஜப்பானியத் தூதுக் குழுவுடன் சு.ப.தமிழ்ச்செல்வன் பேச்சு வார்த்தை நடத்தினார். இப்பேச்சுக்களின் முடிவில் செய்தியாளர்களைச் சந்தித்தபோதே அவர் மேற் கண்டவாறு தெரிவித்தார்.

வட.கிழக்கு புனர்வாழ்வு, அபி

(10ஆம் பக்கம் பார்க்க)

### அன்ரனா பொருத்திய வேளை

## உயரழுத்த மின் தாக்கி தந்தையும் மகனும் பலி

(யாழ்ப்பாணம்)

உயர் அழுத்த மின்சாரம் தாக்கியதால் நாவாந்துறையைச் சேர்ந்த தந்தையும் மகனும் சம்பவ இடத்திலேயே உடல் கருகிப் பலியாகினர்.

நாவாந்துறை, கல்லூரி வீதியில் மேற்படி சம்பவம் நேற்று மாலை நடைபெற்றது. தகப்பனும் மகனும் இணைந்து, தமது வீட்டில் தொலைக் காட்சிக்கான அன்ரனாவைப் பொருத்த முற்பட்ட சமயம், குறிப்பிட்ட அன்ரனா பைப் சரிந்து உயரழுத்த மின்சார மார்க்கத்தின் மீது வீழ்ந்தது. மேற்படி பைப்பின் வழியாக மின்சாரம் தாக்கியதனாலேயே இந்த விபரீதம் நிகழ்ந்தது.

இச்சம்பவத்தில் சூசை வீரசிங்கம்(வயது 56) என்பவரும் இவரது மகனான வீரசிங்கம் சொலமன்(வயது 18) என்பவரும் சம்பவ இடத்திலேயே பலியாகி விட்டனர். இவர்களது சடலங்கள் பொலிசாரால் யாழ். போதனா மருத்துவமனையில் ஒப்படைக்கப்பட்டன. (க)

SERENDIB விமான சேவை

எமது முகாமைத்துவம் உள்நாட்டில் மட்டுமல்ல சர்வதேசத்திலும் உள்ளது.

J/FT/P - 021-2223916, 0777-801038
CMB 505632 - 390128 - 517019

(சி-148)

## சிறு விளம்பரம்

### காணி விற்பனைக்கு

தாவடி பாடசாலை வீதியில் நாற்புறமும் சுற்றுமதிலுடன் கூடிய, வீடுகள் கட்டக்கூடிய, விசாலமான காணி உடன் விற்பனைக்குண்டு. தரகர்கள் தேவையில்லை. சி.பத்மநாதன், சுதுமலை வீதி, தாவடி.

(024)

### தவறிவிட்டது

751ம் இலக்க பாதையில் மினிபஸ்சில் (விநாயகர் பஸ்) பயணம் செய்தவேளை பருத்தித்துறை, இன்பருட்டியை சேர்ந்த தம்பையா நடராசா, நடராசா அழகம்மா, நடராசா செல்வமலர் ஆகிய எமது தேசிய அடையாள அட்டைகள், த. நடராசா என்பவரது மக்கள் வங்கிச் சேமிப்புப் புத்தகம், ஒரு தொகை பணம் என்பன தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் வடமராட்சி வடக்கு கடற்தொழிலாளர் சங்க சமாசத்தில் ஒப்படைக்கவும்.

(சி-168)


ஜொ.எகட்டனின் ஜெசித்தாராவின்
இன்றைய ஸ்பெசல்
சில்வர் ஸ்ரீக்
சிக்கன் புரியாணி
ரூபா 125/=
ஜெசித்தாரா
சுண்டிக்குளி மகளிர் கல்லூரி முன் ஒழுங்கை, சுண்டிக்குளி.
(சி-163)

நிறைஞ்சனாஸ் சங்கானை
காட்சி நேரம்: 11.00. 2.45. 6.00
சரத்குமார், ரோஜா, நடித்த
சின்னத்துரை
சனி, ஞாயிறு மட்டும்
இரவு 8.45 காட்சி
"FINAL FIGHT"
(கராட்டிப் படம்)
(சி-139)

ராஜா
யாழ்ப்பாணம்.

தீபாவளி வெளியீடு
அஜித் (இரட்டை வேடம்)
கிரண், மீனா நடித்த
வில்லன்
காட்சிகள்: 10.30, 2.30, 6.00, 9.30
இயக்கம்: K.S.ரவிக்குமார்.
(சி-151)





# கேள்வி அறிவித்தல்

## அரசாங்க செயலகம், கச்சேரி, கிளிநொச்சி.

01. கீழ்வரும் வேலைக்கான கேள்விகள் கிளிநொச்சி மாவட்ட (அரசாங்க அதிபர், கச்சேரி) கேள்விச சபைத் தலைவரினால் 2002ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 21ஆம் திகதி மு.ப. 10.00 மணிவரை கிளிநொச்சி கச்சேரியில் ஏற்றுக்கொள்ளப்படும்.
பெறப்பட்ட கேள்விகள் உடனடியாக இவ் அலுவலகத்தில் திறக்கப்படும். கேள்வி கோருபவர்கள் அல்லது அவரால் அங்கீகாரம் அளிக்கப்பட்ட அவரது பிரதிநிதி ஒருவர் கேள்விகள் திறக்கப்படும் போது சமூகமளிக்கும்படி அறிவுறுத்தப்படுகின்றனர்.

02. நிர்மாணப் பயிற்சி நிறுவனத்தில் இக்ராட் (ICTAD) கட்டடங்கள் நிர்மாணிப்பதற்குக் கீழே குறிப்பிடப்படும் தரங்களையுடைய அல்லது அதற்கு மேற்பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தகாரர்கள் மட்டும் கேள்விப் பத்திரங்கள் கோருவதற்குத் தகுதியுடையோராவார்.

03. ஒப்பந்தப்பத்திரங்களைப் பெறுவதற்கு முன்னர் நிர்மாணப் பயிற்சி நிறுவனத்தினரால் வழங்கப்பட்டதும், இற்றைவரை செய்யப்பட்ட வேலைகளின் விபரங்கள் அடங்கியதுமான பதிவுப் புத்தகத்தை கட்டடங்கள் திணைக்களம் (மாகாணம்) கிளிநொச்சி நிறைவேற்று எந்திரியிடம் சமர்ப்பித்தல் வேண்டும்.

04. தகுதியுடையோர் மட்டும் உரிய கேள்வி வைப்புப் பணத்தைச் செலுத்த அனுமதிக்கப்படுவர். வைப்புப பணத்தை கிளிநொச்சி கட்டடங்கள் திணைக்களப் (மாகாணம்) பிரதம எந்திரி அலுவலகத்தில் செலுத்தி பற்றுச்சீட்டைப பெற்று கேள்விப் பத்திரங்களை 2002ம் ஆண்டு நவம்பர் மாதம் 14ம் திகதி, வியாழக் கிழமை பிற்பகல் 3.00 மணிவரை கிளிநொச்சி, கட்டடங்கள் திணைக்களம் (மாகாணம்) நிறைவேற்று எந்திரியிடமிருந்து பெற்றுக் கொள்ளலலாம்.

| வேலை விபரம் | பதிவு செய்யும் தரம் | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப் பணம் | மீளளிக்கப்படாத கேள்வி வைப்புப் பணம் |
|---|---|---|---|
| சுகாதார வைத்திய அதிகாரி அலுவலக நிர்மாணவேலை கட்டம் 1 கிளிநொச்சி | தரம் -7 | 5000/- | ரூ.750/- |

05. கேள்வி கோருபவர் ஒருவருக்கு ஒரு வேலைக்கு ஒரு தொகுதி ஆவணங்கள் மட்டுமே விநியோகிக்கப் படும்.

06. கேள்வி ஆவணங்களை இலவசமாகப் பரீட்சிக்கலாம். மேலதிக விபரங்களை கிளிநொச்சி கட்டடங்கள் திணைக்களம் (மாகாணம்) நிறைவேற்று எந்திரியிடமிருந்து வேலை நாட்களில் அலுவலக நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

**தி.இராசநாயகம்,**
**தலைவர், மாவட்டக் கேள்விச் சபை,**
**அரசாங்க அதிபர்,**
**கிளிநொச்சி மாவட்டம்.**

(சி-167)

# வட இலங்கை சங்கீத சபை பரீட்சைகள் 2003

வட இலங்கை சங்கீத சபையின் 2003 ஆம் ஆண்டு பரீட்சைகளுக்கான விண்ணப்பப்படிவங்கள் 2002.11.11 முதல் விற்பனைக்கு வரும். விண்ணப்ப முடிவுத்திகதி 2003.01.06. விண்ணப்பப்படிவம் ஒன்றின் விலை அறிவுறுத்தல் பிரதியுடன் ரூபா இருபத்தைந்து **(25/-)**

விண்ணப்பப்படிவத்தை தபால் மூலம் பெறவிரும்புவோர் ரூபா 25/- பெறுமதியான காசுக்கட்டளை (மணி ஓடர்) உடன் ரூபா 4.50 பெறுமதியான தபால்தலை ஒட்டிய, சொந்த முகவரி எழுதப்பட்ட நீள் (10செ.மீ.x 22செ.மீ) கடித உறையை அனுப்பிப் பெற்றுக்கொள்ளலாம்.

யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த தேர்வு நாடிகள்,

**வடஇலங்கை சங்கீத சபை,**
**யாழ். வலய கல்விப் பணிமனை,**
**செம்மணி வீதி,**
**யாழ்ப்பாணம்.**

**எனும் இடத்தில் விண்ணப்பப்படிவங்களை பெற்றுக்கொள்ளவும்.**

**வடஇலங்கை சங்கீத சபை,**
**யாழ்.வலய கல்விப் பணிமனை,**
**யாழ்ப்பாணம்.**

(சி/166)

# இன்றைய நாள் இனிய நாள்

## 09-11.2002 - சனிக்கிழமை

**மேடம்** :- தேகசுகம் நன்று, பணவரவு, எடுத்த காரியம் வெற்றி, வாகனபலன், கல்வி ஊக்கம் வேண்டும், தொழில் முன்னேற்றம், வியாபார முன்னேற்றம்.

**இடபம்** :- தேகசுகக்குறைவு, தேவையற்ற செலவு, புதிய காரியத்தில் ஈடுபடுவது தவிர்க்கப்படல் வேண்டும், தொழிலில் குழப்ப நிலை, கல்வியில் ஊக்கம் வேண்டும், வியாபார முன்னேற்றக்குறைவு.

**மிதுனம்** :- தேகசுகம் நன்று, பணவரவு, தொழில் நிலை சமம், கல்வி முன்னேற்றம், வியாபார முன்னேற்றம், மனைவி மகிழ்ச்சி, விருந்தினர் வருகை, தெய்வ வழிபாடு.

**கர்க்கடகம்** :- நோய் நீக்கம், எடுத்த காரியம் வெற்றி, கடன் வசதிகள், வாகன பலன், கல்வியில் ஊக்கம் வேண்டும், வியாபார மத்திமநிலை.

**சிங்கம்** :- தெய்வ சேவையில் புகழ், புத்திரர் சுகம், சமயநூல்கள் கற்றல், தொழில் முன்னேற்றம், கல்வி முன்னேற்றம், வியாபார முன்னேற்றம்.

**கன்னி** :- மாதா தேகசுகக் குறைவு, வைத்தியச் செலவு, உறவினரால் செலவு, வாகனச் செலவு, கல்வியில் ஊக்கம் வேண்டும், வியாபாரம் சமம்.

**யாழ். கொக்குவில் இ.சி.இரகுநாதையர்**
**அவர்களின் சகோதரரின் புத்திரர்**
**இ.வெங்கடேச ஐயர்.**

**துலாம்** :- தெய்வ தரிசனம், சமய அறிஞர் உறவு, எடுத்த காரியம் வெற்றி, விருந்தினர் மகிழ்ச்சி, கல்வியில் ஊக்கம் வேண்டும், வியாபார முன்னேற்றம்.

**விருச்சிகம்** :- மனச்சஞ்சலம், வரவுக்கு மிஞ்சிய செலவு, பெண்களால் சண்டை, வாக்குவாதம், கல்வி முன்னேற்றம், வியாபார முன்னேற்றம் குறைவு.

**தனு** :- மகிழ்ச்சி, தெய்வ தரிசனம், உறவினர் கூடுதல், விருந்தினர் கூடுதல், தொழில் முன்னேற்றம், கல்வி முன்னேற்றம், வியாபார முன்னேற்றம்.

**மகரம்** :- மனச்சஞ்சலம், தேவையற்ற சண்டை, எடுத்த காரியம் தடை, தேகசுகக் குறைவு, கர்வ நிலை உருவாதல், கல்வியில் ஊக்கம் வேண்டும், வியாபார முன்னேற்றம்

**கும்பம்** :- :தெய்வ தரிசனம், சமய அறிஞர் உறவு, செய்தொழில் வருவாய் மகிழ்ச்சி, கல்வி சமநிலை, வியாபார முன்னேற்றம்.

**மீனம்** :- தொழிற் சிறப்பு, தெய்வ சேவையில் மதிப்பு, மரியாதை, மகிழ்ச்சி, கல்வியில் ஊக்கம் வேண்டும், வியாபார முன்னேற்றம்.


யாழ்.மாவட்ட
சனசமூக நிலையங்களுக்கு
நமது ஈழநாட்டின்
இலவசப் பிரதிகள்!

யாழ்.மாவட்டத்திலுள்ள 50 சனசமூக நிலையங்களுக்கு
'நமது ஈழநாடு'
ஒரு மாதகாலத்திற்கு இலவசப்பிரதிகளை அனுப்பவுள்ளது.
நீங்கள் செய்ய வேண்டியது இதுதான்
கீழுள்ள கூப்பன்களில் ஐந்தினை நிரப்பி எதிர்வரும் 15.11.2002 ற்கு முன்னதாக
'நமது ஈழநாடு'
267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.
என்ற முகவரிக்கு அனுப்பி வையுங்கள்
* குலுக்கல் முறையில் தேர்ந்தெடுக்கப்படும் 50 சனசமூக நிலையங்களின் விபரம் 17ஆம் திகதிய நமது ஈழநாட்டில் வெளியாகும்.
* தேர்ந்தெடுக்கப்படும் சனசமூக நிலையங்களுக்கு வரும் 20.11.2002 இலிருந்து 20.12.2002 வரை இலவசப் பிரதிகள் அனுப்பி வைக்கப்படும்.

நமது ஈழநாடு இலவசப் பிரதித் திட்டம்
சனசமூக நிலையத்தின் பெயர் : ........................................
பதிவு இலக்கம் : ........................................
முகவரி : ........................................
நூல் நிலைய வசதி : உண்டு / இல்லை
இலவசப்பிரதியை பெறக்கூடிய அருகிலுள்ள 'நமது ஈழநாடு' பத்திரிகை முகவர் : ........................................
........................................ ........................
தலைவர்/ செயலாளர் ஒப்பம் திகதி

# நேற்றைய பேரணியிலிருந்து...



நேற்றைய கண்டனப் பேரணியில் கலந்துகொண்டோரை முதலிரு வரிசைகளிலும், மூன்றாவது வரிசையில் கண்டனக் கூட்டத்தில் மகஜரை பெற்றுக் கொண்டு உரையாற்றும் மேலதிக அரச அதிபர் சு.வைத்திலிங்கத்தையும், தலைமையுரையாற்றும் யாழ். மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றியத் தலைவர் சூ.சிறிலையும் கண்டனக் கூட்டத்தில் கலந்து கொண்ட பிரமுகர்களையும் படங்களில் காணலாம். (படங்கள்: லிவிங்ஸ்டன், பத்மநாதன்)

## கடற்படையின் பிராந்தியக் கட்டளை தலைமைத்துவங்களில் திடீர் மாற்றம்!

### உடனடியாக அமுலுக்கு வந்தது

(கொழும்பு நிருபர்)

சிறிலங்கா கடற்படையின் வட மத்திய, தெற்கு, கிழக்குப் பிராந்தியக் கட்டளையமைப்புக்களில் மாற்றங்கள் செய்யப்பட்டிருப்பதாக கடற்படைத் தலைமையகம் அறிவித்துள்ளது.

நேற்று நடைமுறைக்கு வரத்தக்கதாக இந்த இடமாற்றங்கள் உடனடியாக அமுல்படுத்தப்பட்டுள்ளன. கிழக்குப் பிராந்திய உதவிக்கட்டளை அதிகாரியாக இருந்த கொமடோர் டி.டபிள்யூ.ஆர்.தசநாயக்க, வடமத்திய கடற்படைப்பிரிவுக் கட்டளை அதிகாரியாக இருந்த கொமடோர் வசந்த தென்னக்கோன், தென்பிராந்தியக் கடற்படைத் தளபதியாக இருந்த கொமடோர் திசேர சமரக்கோன் ஆகியோர் கொழும்பிலுள்ள கடற்படைத் தலைமையகத்துக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

கிழக்குப் பிராந்திய உதவிக் கடற்படைத் தளபதியாக கொமடோர் எஸ்.ஆர்.சமரதுங்கவும், வடமத்திய கடற்படைப்பிரிவுக்கு கொமடோர் ஆனந்த பீரிஸும், தென்பிராந்திய கடற்படைப்பிரிவுக்கு கொமடோர் தம்மிக சமரவிக்கிரமவும் நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

## ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழக மாணவர்களிடையே மோதல்

### சொத்துக்கள் நாசம்; அறுவர் படுகாயம்

(கொழும்பு)

ஸ்ரீஜெயவர்த்தனபுர பல்கலைக் கழகத்தில் நேற்றுமுன்தினம் மாலை மாணவர்கள் கோஷ்டிகளிடையே இடம்பெற்ற மோதலில் பல்கலைக் கழகத்து உடமைகளுக்கு பலத்த சேதம் ஏற்பட்டுள்ளது.

கட்டடங்களுக்கும், கணினிகள், கல்விசார் உபகரணங்கள் உட்பட தளபாடங்களுக்கும் பாரிய சேதம் ஏற்பட்டுள்ளது.

இந்த மோதல் சம்பவத்தில் காயமடைந்து கொழும்பு தெற்கு வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட 6 பேரில் கவலைக்கிடமான நிலையில் காணப்பட்ட இருவர் கொழும்பு தேசிய வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளனர்.

## மீளக் குடியமர வந்த மக்களை அனுமதி மறுக்கும் படையினர்

(வடமராட்சி)

வன்னியிலிருந்து மீளக்குடியமர வந்த பத்துக் குடும்பங்களை - பருத்தித்துறை இராணுவமுகாம் பகுதியில் அமைந்துள்ள தமது சொந்த வீடுகளில் மீளக் குடியமரப் படையினர் அனுமதி மறுத்துள்ளனர்.

1996ஆம் ஆண்டு யாழ். குடாநாட்டில் ஏற்பட்ட யுத்த நடவடிக்கையினால் இடம்பெயர்ந்த இப்பகுதி மக்கள் வன்னியில் தங்கியிருந்தனர். தற்போது ஏற்பட்டுள்ள சமாதானச் சூழலில் மீளவும் சொந்த இடங்களில் மீளக் குடியமர வந்தவேளை வன்னியிலிருந்தவர்கள் என்ற காரணத்தால் அவர்களை மீளக்குடியமர அனுமதிக்கவில்லை.

பருத்தித்துறை நகரிலுள்ள அதியுயர் பாதுகாப்பு வலயத்தினுள் கொட்டடிப் பகுதியின் ஒரு பகுதி உளடக்கப்பட்டுள்ளது. இப்பகுதியில் 30இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் வாழ்ந்து வருகின்றபோதும் - வன்னியிலிருந்து வருபவர்கள் மீளக்குடியமர அனுமதிக்கப்படவில்லை.

இதனால் இப்பகுதி மக்கள் முனை, தும்பளை கிழக்கு, அத்தியடி, தம்புறுவளை பிள்ளையார் கோயிலடி பகுதிகளில் தற்காலிக கொட்டகையை அமைத்து வாழ்ந்து வருகின்றனர். (23)

## எனது பாதுகாப்புப் பிரிவினரை விசாரிக்க விசேட நடைமுறை

### பொலிஸ் மா அதிபரிடம் ஜனாதிபதி கோரிக்கை

(கொழும்பு)

ஜனாதிபதி பாதுகாப்புப் பிரிவு உறுப்பினர்களை விசாரணை செய்யும்போது பொலிஸார் விசேட நடைமுறைகளைப் பின்பற்ற வேண்டும் என்று ஜனாதிபதி பொலிஸ் மா அதிபரைக் கேட்டுக்கொண்டுள்ளார்.

மேற்படி உறுப்பினர்கள் தங்கியுள்ள பகுதிக்குச் சென்று பொலிஸார் விசாரிக்க முடியாது என்றும் குறிப்பிட்ட இடமொன்றுக்கு அழைதது தமது விசாரணைகளை செய்யவேண்டும் என்றும் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

## ஆயுதக் கொள்வனவு மோசடிகள் இரகசியப் பொலிஸார் விசாரணை!

### இன்ரபோல் உதவியும் பெறப்படுகிறது

(கொழும்பு நிருபர்)

பொதுஜன ஐக்கிய முன்னணி ஆட்சிக்காலத்தில் ஆயுதக் கொள்வனவுகளில் இடம்பெற்றதாகக் கூறப்படும் மோசடிகள் குறித்து இரகசியப் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

இரகசியப் பொலிஸாரின் விசாரணைகளின் ஒரு கட்டமாக ஆயுதக் கொள்வனவுகள் தொடர்பான கோப்புக்களைப் பெற்றுத் தருமாறு சர்வதேசப் பொலிஸிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

விமானப்படைக்கென கொள்வனவு செய்யப்பட்ட எம்.ஐ.24 ரக தாக்குதல் உலங்கு வானூர்திகள், பல்குழல் பீரங்கிகள் மற்றும் பல இராணுவத் தளபாடங்களைக் கொள்வனவு செய்தபோதே பெருமளவிலான மோசடிகள் இடம்பெற்றதாகக் கூறப்படுகின்றது. இவை தொடர்பாக ஆராய்வதற்கென அரசாங்கம் ஆணைக்குழுவொன்றை அமைத்திருந்தபோதும், படையதிகாரிகளின் பூரண ஒத்துழைப்பு மற்றும் தகவல்கள் கிடைக்காமையால் விசாரணைகள் முழுமையாக இடம்பெறவில்லை.

இதனையடுத்தே அரசாங்கம் விசாரணைகளை இரகசியப் பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளது.

## காஞ்சிரங்குடா விசாரணை அறிக்கை உள்துறை அமைச்சரிடம் கையளிப்பு

(கொழும்பு நிருபர்)

காஞ்சிரங்குடாவில் அதிரடிப் படையினரால் எட்டு அப்பாவிப் பொது மக்கள் படுகொலை செய்யப்பட்டமை தொடர்பாக, நடத்தப்பட்ட விசாரணைகளின் அறிக்கையை ஹரி குணதிலக குழு நேற்றுக் கையளித்துள்ளது.

ஆணைக்குழுவின் தலைவரான எயர் மார்ஷல் ஹரி குணதிலக இந்த அறிக்கையை நேற்றுக்காலை 11 மணியளவில் உள்துறை அமைச்சர் ஜோன் அமரதுங்கவிடம் கையளித்தார்.

இந்த அறிக்கை படையினருக்குச் சார்பான வகையில் அமைந்துள்ளதாகவும், படையினர் இறுதிக் கட்ட நடவடிக்கையாகவே துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்டதாக இந்த ஆணைக்குழுவின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருப்பதாகவும் தெரியவருகிறது.

### காரைநகரில் குழாய்நீர் விநியோகம்

காரைநகர் கிழக்கு சுந்தரமூர்த்தி நாயனார் வித்தியாலய பாடசாலை மாணவர்களின் குடிநீர்ப் பிரச்சினையை நீக்கும் பொருட்டு - போரூட் நிறுவனத்தினால் சுமார் 63 ஆயிரம் ரூபா செலவில் குழாய் நீர் விநியோகம் மறுசீரமைக்கப்பட்டுள்ளது. (52)

### அரியாலை மயானத்தில் மிதிவெடிகள் அகற்றப்படுகிறது

கடந்த இரண்டு வருடங்களுக்கும் மேலாக இராணுவ நடவடிக்கை காரணமாக பயன்படுத்த முடியாமலிருந்த அரியாலை சித்திப்பாத்தி மயானப் பகுதி இராணுவததினரால் மிதிவெடிகள் அகற்றப்பட்டு துப்பரவாக்கப்பட்டு வருகின்றது. (55)

### நமழான் தொழுகை நேரங்கள்

| | |
|---|---|
| ஸஹர் முடிவு | 4.56 |
| சுபஹ் | 5.11 |
| உதயம் | 6.30 |
| லுஹர் | 12.26 |
| அஸர் | 3.48 |
| ம.்ரிப் | 6.20 |
| இஷா | 7.32 |

## ஆசியான் - இந்திய உச்சி மகாநாடு

# இந்தியாவின் அரசியல் பொருளாதாரத்தில் புதிய அத்தியாயத்தை உருவாக்குமா?

இந்தியப் பிரதமர் அடல் பிஹாரி வாஜ்பாய் தென்கிழக்காசிய நாடுகளுக்கு விஜயம் செய்திருப்பது இது



முதல் தடவையல்ல. ஆனால் அவர் விஜயம் செய்த நாடுகளில் கம்போடியாவுக்கான பயணத்தால், ஜவகர்லால நேரு விஜயம் செய்த பின்னர் அங்கு சென்ற முதல் இந்தியப் பிரதமராகின்றார். இதேபோன்றே கடந்த மாதம் ஐரோப்பிய நாடுகளுக்கு பயணம் செய்த போதும் சைபிரஸ், டென்மார்க் போன்ற நாடுகளுக்கு மிக நீண்ட காலத்திற்கு பின்னர் சென்ற இந்தியப் பிரதமராக வாஜ்பாய் விளங்கினார். அவர் இறந்து போன முன்னாள் பிரதமர் ராஜீவ்காந்தியை போல் உலகம் சுற்றும் வாலிபனாக இல்லாத போதும் இந்தியப் பிரதமர்களில் புதிய சகாப்தம் ஒன்றை நிலைநாட்டுபவராக விளங்குகின்றார். நடை தளர்ந்தபோதும் பிரதமர் - இந்தியா என்ற பாரம்பரியத்தையும், தளராத பிடியையும் தந்திரமான போக்கையும் கடைபபிடித்து வருகின்றதனை காணலாம். இவ்வாரம் இந்தியப் பிரதமரின் 'ஆசியான்' உடனான உறவையும், அதனால் ஏற்படவுள்ள அரசியல் - பொருளாதார மாற்றங்களையும் நோக்குவோம்.

முடிந்த வாரத்தின் ஆரம்ப நாட்களில் ஆசியான்- இந்திய மகாநாடு புதிய மாற்றங்களை கோடிட்டுக் காட்ட முயன்றுள்ளது. மேற்குப் பொருளாதாரத்துடன் நெருக்கத்தை கொண்டிருந்த இந்தியா- தென்னாசியாவுக்குள் தனித்துவமும், பாதுகாப்பும், பேணிய இந்தியா- திடீரென கடந்த சில ஆண்டுகளாக ஆசியானை நாடிச் செல்வதன் நோக்கம் எதுவென்பதே தற்போது எழுந்துள்ள கேள்வியாகும்.

இந்தியாவின் வருடாந்த பொருளாதார வளர்ச்சி கடந்த ஒரு தசாப்தத்தில் 5-7 சதவீதத்திற்குள் அமைந்திருந்தது. ஆனால் 2002 இல் இந்நிலை குறைவான வீதத்தையே இதுவரை பதிவு செய்துள்ளது (5.2%). இது மட்டுமன்றி வறுமை, வேலையின்மை, மானிடவிருத்தி, சமூக விருத்திகள் எல்லாமே மிகமோசமான பாதிப்பை கொண்டுள்ளதாக அமைந்திருக்கின்றது. இதனால் இந்தியாவின் பொருளாதாரத்தை பலப்படுத்த வேண்டிய அவசியம் மிக நண்ட காலத்திற்கு முன்பே உணரப்பட்ட போதும் அதனை அமுல்படுத்துவதில் பல நெருக்கடிகள் அவ்வப்போது ஏற்பட்டு வந்தன. இதனால் இந்தியாவின் பொருளாதாரம் மட்டுமல்ல, அரசியல் - சமூகச் சீரழிவுகள அதிகரிக்கும் நிலை காலப்போக்கில் இந்தியாவை ஆபத்தான நிலைக்கு கொணடு சென்றுவிடும் என்பது பொருளாதார, சமூகவியலாளர்களின் ஆதங்கமாக அமைந்திருந்தது. இத்தகைய நோக்கில் வாஜ்பாயின் விஜயம் அமைந்திருந்தால் இந்தியாவுக்கும், தென்னாசியப் பிராந்தியத்திற்கும் இலாபமாக அமையும்.

ஏனெனில், ஆசியான் நாடுகளுடன் கலந்துரையாடுகின்ற போது இரண்டு காரணிகளை வலுவாக பிரதமர் உணர்த்தியிருந்தார்.

ஒன்று, தடையற்ற வர்த்தகத்தினை **(Free trade)** இந்தியாவுடன் ஆசியான் நாடுகள் மேற்கொள்ள வேண்டுமென கோரிக்கை விடுத்திருந்தார் பிரதமர். அதனை ஆசியான் நாடுகள் வரவேற்றுள்ளதாகவும், அதனைப் பரிசீலிக்க உள்ளதாகவும் ஆசியான உறுப்பு நாடுகளின் பிரதிநிதிகள் தெரிவித்ததாக இந்திய ஊடகங்கள் தகவல் வெளியிட்டுள்ளன. அதன் முக்கியத்துவத்தை உணர்வதனை விடுத்து இந்தியப் பிரதமர் ஆசியானுடன் அவ்வாறு கோரிக்கை விடுவதற்கு வலுவான காரணம் எதுவென்பதே முக்கியமாகும்.

இந்தியப் பிரதமர் ஐரோப்பிய நாடுகளுக்கு பயணம் செய்த போது இதே கோரிக்கையை சில நாடுகளிடம் விடுத்திருந்தார். ஆனால் ஐரோப்பிய நாடுகள் எவையும் கோரிககைக்கு பெரியளவில் செவிசாய்த்ததாகத் தெரியவில்லை. மாறாக இந்தியாவில் வர்த்தகம் செய்ய விரும்புகிறார்கள் என்பதை மட்டுமே கொண்டிருக்கிறார்களே அன்றி இந்தியப் பொருட்களைத் தாம் கொள்வனவு



செய்யும் முறைமையை தவிர்க்க விரும்புவதுடன், **WTO** வின் நிபந்தனைக்குட்பட்டே இந்தியப் பொருட்களை ஐரோப்பிய நாடுகளுக்கு எடுத்துச் செல்ல விரும்புகின்றனர். அதுகூட ஐரோப்பிய நாடுகளில் தட்டுப்பானை அதேநேரம், உயர் குடும்பங்கள் நுகருகின்ற பொருட்களை மட்டுமே ஐரோப்பிய வர்த்தக நிறுவனங்கள் கொள்வனவு செய்ய விரும்புகின்றனர். இந்தியாவோ, இங்கு உற்பத்தியாகும் அனேக பொருட்களை ஐரோப்பிய நாடுகளுக்கு எடுத்துச் செல்ல விரும்புகிறதென்பது அடிப்படையானதாகும். இந்த இழுபறித் தன்மை இந்தியர்கள், ஐரோப்பிய - அமெரிக்க நாடுகளுடன் கொண்டிருக்கும் வர்த்தக உறவை படிப்படியாக குறைந்து வருகின்றது. மேற்கு நாடுகள் இந்தியாவுடன் வர்த்தக உறவை விரும்பும் அதேவேளை, இந்தியப் பொருட்களை எல்லைக்குள் நுகரும் பழக்கத்தை பேணுவதுடன், இந்தியப் பொருட்கள் தமக்கு பாதகமாக அமைந்து விடுமென கருதுகின்ற போக்கும் காணப்படுகின்றது. இதன் பாதிப்புகளை உணரும் வாஜ்பாய் அரசாங்கம், மாற்று நடவடிக்கைக்குள் இந்தியாவை கொண்டு செல்கின்றது.

இந்தியா தென்னாசியப் பிராந்தியத்திற்குள் ஆபத்தான அரசியலால் அதிக இழப்பீடுகளை பொருளாதார ரீதியில் எதிர்கொள்கிறது. பாகிஸ்தானுடனான அரசியல் முரண்பாடு, ஏனைய நாடுகளுடனான உறவுகளில் காணப்படும் பாதகமான போக்கு, வர்த்தகம்- சந்தைவாய்ப்புக்களில் ஏற்பட்டுள்ள நெருக்கடிகள் என்பவற்றால் பிராந்திய ஒத்துழைப்புப் பொருளாதாரத்தை கட்டி வளர்க்க முடியாதுள்ளது. தென்கிழக்காசியப் பிராந்தியத்தின் முன்னுதாரணத்தை இந்தியா பின்பற்ற முயலுமாயின், அரசியல் அதிகாரத்தை இழப்பதுடன் பிரிவினைக்கு வழியாக அமைந்து விடுமென அஞ்சுகின்றது. மேலும், உள்நாட்டில் மகத்தாக கட்டியெழுப்பப்பட்டுள்ள அரசியலை தக்கவைக்க முடியாது என்பதுடன், வன்முறையையும் கட்டுப்படுத்த முடியாது எனக கருதுகின்றது. இதனால் தென்னாசியா அல்லாத பிராந்தியத்துடன் இணைந்து செயற்படுவது அரசியல் அடிப்படையில் இலாபகரமானதென இந்தியா கருதுகின்றது.

இது மட்டுமன்றி, இந்தியா தென்னாசியாப் பிராந்தியத்திற்குள் தலைமை தாங்கும் அரசியலை தொடர்ந்தும் தக்கவைக்க வேண்டுமாயின், தென்னாசியா தவிர்ந்த பிராந்தியத்துடன் கூட்டிணையாகச் செயறபடுதல் அவசியம். அதனடிப்படையிலேயே ஐரோப்பாவுடன் எடுத்த முயற்சி தோற்றுப் போனமையால், தென்கிழக்கு ஆசியாவுடன் இணைந்து செயற்பட முனைகிறது. இதற்கு முன் ஐரோப்பிய நாடுகளுடன் எடுத்த முயற்சிக்கு இந்தியா பக்கம் நியாயப்பாடும் உண்டு. ஏனெனில், ஆசியானில் சீனா அங்கத்துவ நாடாக இல்லாவிடினும் நெருக்கமான உறவைப் பேணுகின்ற நாடு என்பது மட்டுமன்றி- பொருளாதாரப் பலத்திலும், இராணுவ - அரசியல் வலுவிலும் இந்தியாவுக்கு சவாலான நாடு என்பதனால் இந்தியா ஐரோப்பிய அரசுகளை நாடியது. அது வலுவற்றுப் போகும் சூழலில் அல்லது ஐரோப்பியர்களுடான பேரம் பேசலை அதிகரிப்பதற்கு தென்கிழக்காசியாவுடன் இந்தியா நெருக்கமான பொருளாதார உறவை ஏற்படுத்த விரும்புகிறது.

வாஜ்பாய் அரசாங்கத்திற்கு மிகவும் முக்கியமான பிரச்சினையாக அமைந்திருப்பது, உள்நாட்டிற்குள் எழுந்துள்ள அதிகாரப் போட்டியும் கேள்விக்குள்ளாகியிருக்கும் எதிர்கால அரசியலுமாகும். அதனை நிறைவு செய்வதற்காக இந்தியப் பொருளாதாரத்தை வளர்த்தாக வேணடியுள்ளது. ஏனெனில், பாரதீய ஜன தாக்கட்சியின் பொருளாதாரக் கொள்கை மீதான அதிருப்தியானது காங்கிரஸ் கட்சிக்கு மட்டுமன்றி பிராந்தியக கட்சிகளுக்கும் அரசியல் பலததைக் கொடுப்பதில் வெற்றி கண்டுள்ளது. அதனால் அதிர்ந்துபோயுள்ள ஆளும் பாரதீய ஜனதா, பிரதமரை வெளிநாடுகளுக்கும், பிரதிப்பிரதமரை உள்நாட்டுக்குமென வகைப்படுத்துவது அடுத்த தேர்தலுக்கான தயார்ப்படுத்தலை மேற்கொள்வது போல் அமைந்திருகிறது. வாஜ்பாயினால் சூறாவளிப் பயணங்களை செய்ய முடியாதுவிட்டாலும், வெளிநாடுகளுக்கு திட்டமிடல்களுடனான நகர்வுகளை செய்ய முடிகிறதென்பதை அவதானிக்க முடிகின்றது. அதனால், இந்தி யாவின் பொருளாதார நிமிர்வு சாத் தியப்பட்டாலும், அரசியலில் பாரதீய ஜனதா தாக்குப்பிடிக்குமா என்பது சந்தேகத்திற்குரியது. ஆனால், அடுததுவரும் ஐந்தாண்டுகளை கடந்த நிலையிலாவது, ஆட்சி உரிமையை பாரதீய ஜனதாக்கட்சி கைபபற்ற வேண்டும் என்பதே தற்போதைய தலைமையின் நோக்கமாகும். அதற்கான உறுதிப்படுத்தலை பொருளாதார ஸ்திரத்தன்மைக்கூடாக ஏற்படுத்த இந்தியா முனைகின்ற தென்ப தையே, வாஜ்பாயின் ஆசியான் விஜயம் ஏற்படுத்தியுள்ளது. குறிப்பாக வாஜ்பாய், பத்திரிகையாளர் சந்திப்பொன்றில் பத்து ஆண்டுகளுக்காயினும் தடையற்ற வர்த்தக பரிமாற்றத்தில் ஆசியான் இணைதல் வேண்டு மென கேட்டுள்ளார்.

இரண்டாவது முக்கிய காரணியாக அமைந்திருப்பது பயங்கரவாதம் பற்றிய விடயமாகும். இந்தியா பயங் கரவாதம் பற்றி கருத்து வெளியிட்டிருப்பது, ஆசியானின் தனது அங்கததுவத்தை உறுதிப்படுத்துவது மட்டுமல்லாது பாகிஸ்தான் மீதான எதிர்ப்பை காட்டுவதற்கான நடவடிக் கையாகும். முஷராப் அரசாங்கத்தினை நிராகரிக்கும் வாஜ்பாய் அரசாங்கம், ஆசியான் - பாகிஸ்தான் நட்பைத் துண்டிப்பதுடன் ஆசியான் - இந்தியன் அரசியல், பொருளாதாரப் பலத்தை பேண முயலுகின்றதைக் காட்டுகின்றது. இதனால் இந்தியாவின் பொருளாதாரப் பலமும் அரசியல் பலமும் உயர்வடைவதுடன் எதிர்காலத்தில் இந்தியாவின் உறுதிப்பாடு பாதுகாப்பானதாக அமையும் என்பதைத் தெளிவுபடுத்தும்.

இவ்வாறு பயங்கரவாதம் பற்றி சர்ச்சையை கிழப்புவதும், இந்தியாவுக்கு- பலமான ஆசியான் நட்பு இருப்பதும், மேற்கு நாடுகளின் இரட்டை வேடத்திற்கு பதிலடியாக அமையு மென வாஜ்பாய் கருதுகின்றார். அண்மையில் நடைபெற்ற ஆசியாவின் பாதுகாப்பு மாநாட்டிலும், வாஜ்பாய் பயங்கரவாதம் பற்றியே அதிகம் வலியுறுத்தியிருந்தார். எனவே வாஜ்பாய் பொருளாதாரத்துக்கான நெருக்கத்தினை மட்டும் ஆசியானுடன் ஏற்படுத்தாது, பயங்கரவாதத்திற்கு எதிரான, அதாவது- பாகிஸ்தா னுக்கு எதிரான கூட்டு ஒன்றையும் ஏற்படுத்த முடியாது விட்டாலும், ஒத்து ழைப்பைப் பெறவிரும்புகின்றார். அவ வாறு பெறப்படும் ஒத்துழைப்பானது பாகிஸ்தானை தென்கிழக்காசியாவிலிருந்து தனிமைப்படுத்துமெனவும், அதனால் பாகிஸ்தான் நெருக் கடியை அடையுமெனவும் வாஜ்பாய் கருதுகின்றார்.

மேற்கின் இரட்டைவேடம் மட்டுமன்றி ஆசியானுடன் நெருக்கமடைந்திருக்கும் சீனா - பாகிஸ்தான் உறவையும், பொருளாதார இணைப்பினூடாக துண்டிக்க முயலுகின்றதுபோல் தெரிகிறது. பாகிஸ்தானின் ஏவுகணைத் தொழில்நுட்பத்திற்கும், அணுவாயுதபரிமாணத்திற்கும் சீனாவே அடிப்படைக் காரணி என்பதை உணர்ந்து கொண்ட இந்தியா அதனை முறியடிக்க விரும்புகின்றது. அத்தகைய அணுகுமுறை பொருளாதார இணைப்பினூடாக சாத்தியப்படுமா என்பது சநதேகத்திற்குரியதே. ஏனெனில் சீனாவின் பிராந்திய, சர்வதேச விரிவாக்கக் கொள்கையில் பாகிஸ்தான் முககியம் வகிக்கும் நாடு என்பது குறிப்பிடத்தக்கது.

எல்லாவற்றையும் விட, இந்தியாவின் பிரதான நோக்கங்களில் ஒன்றாக ஐக்கிய ஐரோப்பாவின் இணைப்பு அச்சத்தையும் அதிருப்தியையும் ஏற்படுத்தியுள்ளது. பிராந்தியங்கள் தேசிய எல்லைகளைக் கடந்த நிலையில், பொருளாதாரத்தினை வளர்ப்பதற்காக ஐக்கியமடைகின்றன. குறிப்பாக வட அமெரிக்கா, மேற்கு ஐரோப்பா, ஆசியான் என்பன கடந்த நூற்றாண்டின் பின்னரைப் பகுதியில் இணைப்பையும், விருத்தியையும் அடைந்துள்ளன. ஆனால்- தென்னாசியா, மேற்காசியாவைப்போல் ஒருங்கிணைப்பை ஏற்படுத்திக்கொள்ள முடியவில்லை. அரசியல் அதிகாரப் போட்டியினால் பொருளாதார அடிப்படை தகர்ந்து போகின்றது. தென்னாசிய மக்கள் மேலும் மேலும், வறுமைக்கோட்டின் கீழ் வாழும் நிலைக்கே தள்ளப்பட்டுக் கொண்டிருக்கின்றனர். இதன் தாக்கத்தை இந்தியாவும் அடைந்து கொண்டே இருக்கின்றது. ஐக்கிய ஐரோப்பா எழுச்சியடையுமாயின், இந்தியாவின் பொருளாதாரத்தின் முதலீடுகள் குறைவடைவதுடன் இந்தியாவை வர்த்தகமயப்படுத்து வதற்கான வாய்பபுக்களே அதிகரிக்கும். ஏனெனில், கிழக்கு ஐரோப்பாவுக்கான பரிமாற்றம் ஐக்கிய ஐரோப்பாவுக்குள் அதிகரிக்கும். அதாவது நேரடி முதலீடுகள் மேற்கிலிருந்து கிழக்குக்கு அதிகமாகப் பாயும். அதனால் இந்திய முதலீடுகள் மட்டுப் படுத்தப்படும். புதிய வேங்கைகளாக ஹங்கேரி, போலந்து, செக் குடியரசுகள் என்பன கிழக்கு ஐரோப்பாவுக்குள் எழுச்சி கண்டு வருகின்றன. இது கிழக்காசிய வேங்கைகள்போல அமையாது விட்டாலும் உலகமயமாக்கத்தை உள்வாங்குவதிலும், அதனால் ஏற்படும் பொருளாதார வளர்ச்சியிலும் முன்னணி வகிக்கின்றன.

எனவே, வாஜ்பாயின் ஆசியான் விஜயம், இந்தியப் பொருளாதார- அரசியலை புதிய திசைக்கு இட்டுச் செல்லுகின்றதற்கு - வித்திடுவதாக அமையும். அதனை ஆசியான் நாடுகள் எப்படி எதிர்கொள்ள முயலுகின்றனவோ, அதனைப் பொறுத்து மாற்றம் சாத்தியப்படும்.

கே.ரீ.கணேசலிங்கம்

## சின்னஞ் சிறு செய்திகள்

### சமாதான வாரப் போட்டிகளுக்குப் பரிசளிப்பு

(யாழ்ப்பாணம்)

மனித முன்னேற்ற நடுநிலைய, கரித்தாஸ் சமாதானக் குழுவினர் சமாதான வாரத்தை ஒட்டி நடாத்திய எழுத்தாக்கப் போட்டிகளில் வெற்றிபெற்ற மாணவர்களுக்கான பரிசளிப்பு விழா இன்று பிற்பகல் 3.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

பேச்சு, கட்டுரை, ஓவியம் ஆகிய போட்டிகளில் கலந்து கொண்டு வெற்றி பெற்றவர்களுக்கே பரிசும், சான்றிதழ்களும் இன்று மாலை வழங்கப்படவுள்ளது. இப்பரிசில்களை மனித முன்னேற்ற நிடு நிலைய இயக்குனர் அருட்திரு ஜெயக்குமார் வழங்கி வெற்றி பெற்ற மாணவர்களைக் கௌரவிப்பார்.

### மானிப்பாயில் கிணறுகளுக்கு குளோரின்

(உடுவில்)

நீரினால் பரவக்கூடிய நோய்களைத் தடுக்குமுகமாக மானிப்பாய் பரிஷ் லியோ கழகத்தால் மானிப்பாய் பகுதியில் உள்ள பொதுக் கிணறுகள் மற்றும் வீட்டுக் கிணறுகளுக்கு குளோரின் தூவும் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.(40)

### வடமராட்சியில் மேடையேறும் நாடகம்

(வடமடராட்சி)

பாலாவின் நெறியாள்கையில் "இரத்த நதியில் பூத்த வெள்ளை ரோஜா" நாடகம் வடமராட்சிப் பகுதிகளில் மேடையேற்றப்பட்டு வருகிறது.

வன்னிக்கலைக் கல்லூரி மாணவர்களால், நிரந்தர சமாதானத்திற்கான பண்பாட்டுப் பயணத்தை ஆரம்பித்தே - இவ் ஆற்றுகைகள் நடாத்தப்பட்டு வருகின்றன.

### களுத்துறையில் சமாதான விளையாட்டு

(மல்லாகம்)

களுத்துறையில் 14ம் திகதி நடைபெறவுள்ள "வடக்குத் தெற்கு சமாதான விளையாட்டு" நிகழ்வுகளில் பங்குபற்றுவதற்காக- வலி. வடக்கு பிரதேச செயலர் பிரிவிலிருந்து 22 பேர் தெரிவாகியுள்ளனர்.

இவர்களில் கபடிப் போட்டிக்கு 10 பேரும் தடகளப் போட்டிக்குப் 10 பேரும், கரப்பந்தாட்டப் போட்டிக்கு 2 பேரும் பங்கேற்கவுள்ளனர்.

## வார்த்தை விளையாட்டு - 06




முழுப் பெயர் : ..........................................

கற்கும் பாடசாலை : ..........................................

கற்கும் தரம் : ..........................................

முகவரி : ..........................................

.............................. ..............................

கையொப்பம் திகதி

### இடமிருந்து வலம்

1. மார்க்கோனியின் கண்டுபிடிப்பு.
3. விலங்குக் கழிவுகள் - பசளை எனச் சொல்லலாம்.
4. இச்செல்வத்துக்கு அழிவில்லை.
6. பத்து மில்லியனுக்குச் சமம்.
7. முக்கனிகளில் ஒன்றைத் தரும் மரம்.
8. வேகம்.
10. ஆலயம்.

### மேலிருந்து கீழ்

1. கானமயிலாடக் கண்டிருந்த..... (தானும் அதுபோல ஆடிய பறவை).
2. யுகங்களில் ஒன்று (தலைகீழாக)
3. அநுராதபுரத்தை ஆண்ட தமிழ் மன்னன்.
5. நொடி.
8. ஒரு பாரம்பரிய விளையாட்டு (தலைகீழாக)
9. ஓரெழுத்துத் தமிழ் மாதம்.

சிறுவர் அரங்கம் வார்த்தை விளையாட்டுப் போட்டியில் 15 வயதுக்குட்பட்ட எவரும் பங்கு பற்றலாம்.

மேறகாணும் கூப்பனை நிரப்பி உங்கள் சுயவிபரங்களுடன் தபாலில,

**நமது ஈழநாடு**
**சிறுவர் அரங்கம்**
267, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

என்ற முகவரிக்கு அனுப்பி வையுங்கள்.
உங்கள் பதில்கள் எமக்கு வந்து சேர வேண்டிய
இறுதி நாள்:- 13-11-2002
சரியான விடை எழுதிய மூவர் குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்பட்டு பரிசு வழங்கப்படும்.

## வார்த்தை விளையாட்டு - 05

சரியான விடை எழுதி, குலுக்கல் மூலம் பரிசு பெறத் தெரிவு செய்யப்பட்ட அதிர்ஷ்டசாலிகள்.

*1ஆம் பரிசு -*
**அ.செந்தூரன்**
பயிரிக்கூடல்,
காரைநகர்.

*2ஆம் பரிசு -*
**விக்கினேஸ்வரன் மிதிலா**
3 ஆம் கட்டை, துன்னாலை மத்தி,
கரவெட்டி.

*3ஆம் பரிசு -*
**சு.சுதாகரன்**
தொட்டிலடி மத்தி,
சண்டிலிப்பாய்.

★ *பரிசுகள் தபால்மூலம் விரைவில் உங்களை வந்தடையும்.*

## எனது பாடசாலை

★ எனது பாடசாலையின் பெயர் -
யா/கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலை.
★ எமது அதிபரின் பெயர் - திரு.த.ஞானேஸ்வரன்
★ இங்கு 600 பிள்ளைகள் கல்வி கற்கின்றார்கள், 25 ஆசிரியா கற்பிக்கின்றனர்.
★ இது கொக்குவில் என்ற கிராமத்தில் அமைந்துள்ளது.
★ எனது வகுப்பாசிரியர் பெயர் - வையந்தி.
★ நான் எனது பாடசாலையை மிகவும் நேசிக்கிறேன்.



**அ.விபூஷணன்**
தரம்4D
கொக்குவில் இந்து
ஆரம்ப பாடசாலை.



# சிறுவர் அரங்கம்

## உழைப்பும் பயனும்!



சேவல், சிட்டுக்குருவி, வாத்து ஆகிய மூன்று பறவைகளும் நண்பர்களாக இருந்தன. ஒருநாள் சேவலுக்குச் சில நெல்மணிகள் கிடைத்தன. அந்த நெல் மணிகளை விதைத்துப் பயிரிட்டால் நிறைய நாளைக்கு உணவு கிடைக்குமே என்று சேவல் நினைத்தது. இதனால் அது தனது நண்பர்களிடம் சென்றது. தனது விருப்பத்தைக்கூறி, உதவி கேட்டது. ஆனால் அவை உதவி செய்ய மறுத்துவிட்டன.

சேவல் தனது முயற்சியைக் கைவிடவில்லை. தானே நிலத்தைத் தனியாகப் பண்படுத்திற்று. நெல் மணிகளை விதைத்தது. நெல்லும் பயிராகி வளர்ந்தது. நெல் அறுவடை செய்யும் காலமும் வந்தது. சேவல் தனது நண்பர்களிடம் சென்றது. அறுவடைக்கு உதவி செய்ய வரும்படி கேட்டது.





அவை மறுத்துவிட்டன.

சேவல் தனது முயற்சியைக் கைவிடவில்லை. தானே பயிரை அறுவடை செய்தது. தானியங்களை மாவாக்கிற்று. பின்னர் ரொட்டி சுட ஆரம்பித்தது.

அப்போது அங்கே சிட்டுக்குருவியும், வாத்தும் வந்தன. தமக்கு ரொட்டி வேண்டும் என்று கேட்டன. சேவல் சிறகை அடித்தது; உழைக்காத உங்களுக்கு உணவைக் கேட்க உரிமையில்லை என்றது. அவற்றை அங்கிருந்து விரட்டிற்று.

## வேட்டை வேந்தன் அங்கம் - 2

தமிழில்- தி.தவபாலன்
நன்றி - ரிங்கிள்



## இளந்தேனீக்கள் கழகம் அங்கத்தவர்கள்



முழுப்பெயர் :- அல்பிறட் பிரியா
கற்கும் பாடசாலை :-
யா/ திருக்குடும்ப கன்னியர் மடம்.
கற்கும் தரம் :- 1
ஆர்வமுள்ள துறைகள் :-
கணினி,
முத்திரை சேகரித்தல்.



முழுப்பெயர்:-
நவரத்தினசிங்கம் பிரசாந்
கற்கும் பாடசாலை :-
யா/ பெரியபுலம் மகாவித்தியாலயம்.
கற்கும் தரம் :- 8
ஆர்வமுள்ள துறைகள் :-
புத்தகம் படித்தல், புதிர், கிரிக்கெட்,
முத்திரை சேகரித்தல்.



முழுப்பெயர் :-
அருணகிரிநாதன் விபூஷணன்
கற்கும் பாடசாலை :-
யா/கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலை
கற்கும் தரம் :- 4
ஆர்வமுள்ள துறைகள் :-
கதைபடித்தல், பத்திரிகை படித்தல்,
தொலைக்காட்சி, விளையாட்டு.



முழுப்பெயர்:-வீரபாகு ரமேஸ்குமார்
கற்கும் பாடசாலை :-
யா/சந்திரபுர ஸ்கந்தவரோதயா மகா வித்தியாலயம்
கற்கும் தரம் :- 7
ஆர்வமுள்ள துறைகள் :-
விஞ்ஞானம், கணிதம்,
விளையாட்டுத்துறை.



முழுப்பெயர் :-
வினோஷா அருணகிரிநாதன்
கற்கும் பாடசாலை :-
யா/கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலை.
கற்கும் தரம் :- 1
ஆர்வமுள்ள துறைகள் :- T.V பார்த்தல், முத்திரை சேகரித்தல்.

# எழுத்துருக்கள் தோன்றியது எப்படி!

கி.மு. 30,000 ஆண்டுகளுக்கு முன்னரே ஆதிமனிதன் குகைச் சுவர்களிலும், கற்பாறைகளிலும் கேத்திரகணித வடிவங்களில் மனிதரையும், மிருகங்களையும் அவர்களின் செயற்பாடுகளையும் சாயங்களால் வரைந்துள்ளான். இப்பழமை வாய்ந்த தகவற் செய்திகள் பிக்ரோ கிராப்-படஉருக்கள் **(Picto graph)** என அழைக்கப்படுகிறது.

புராதன சுமேரியர்கள் முதன் முதல் எழுத்து மொழியை 5,000 ஆண்டுகளுக்கு முன் கண்டுபிடித்தனர். களித்தட்டுக்களில் குறியீட்டு உருக்களை எழுதினார்கள். புராதன எகிப்தியர் பட எழுத்துருக்களைப் பயன்படுத்தினர். கிரீஸில் மினோவன் காலகட்டத்தில் பட எழுத்துருக்கள் செப்பு, வெள்ளி, தங்கத்தகடுகளில் எழுதப்பட்டன. இதன்பின் சீனா, இந்தியா ஆகிய இடங்களில் எழுத்துருக்கள் பயன்படுத்தப்பட்டன. சரித்திரப்பதிவுகள், அதாவது குகைமனிதனின் எண்ணப் பதிவுகள் அல்ராமீரா குகை ஓவியங்கள் மூலமும், மற்றும் வரிவடிவங்கள், பட உருக்கள் மூலமும் எம்மால் அறியக்கூடியதாக இருக்கின்றது. இவையே தகவல் தொழில்நுட்பத்தின் அத்திவாரம்.

பப்பிரஸ் **(Papyrus)** புல் எகிப்தியரால் எழுதுவதற்குப் பயன்படுத்தப்பட்டது. சீனத்தேசத்து சாய்லூன் **(Tsai Lun)** - பேப்பரைக் கண்டுபிடித்தார். கி.மு.800ஆம் ஆண்டளவில் மூர்களால் பேப்பர் ஐரோப்பாவில் அறிமுகப்படுத்தப்பட்டது. எழுதும் மை முதன் முதலில் கிரேக்கர்களால் பயன்படுத்தப்பட்டது. ஆரம்பத்தில் மூங்கில் குச்சிகளாலும், இறகுகளாலும் மையைத்தொட்டு எழுதினார்கள்.

1780 இல் உருக்குப் பேனாக்கள் தயாரிக்கப்பட்டு பயன்படுத்தப்பட்டாலும் அவற்றின் விலை நாற்பது ஆண்டுகளின்பின் இயந்திரம் மூலம் தயாரிக்கத் தொடங்கியதும் குறைந்தது. 1884இல் எல்.ஈ.வோட்டமான் **(L.E.Waterman)** முதன்முதலில் ஊற்றுப் பேனாவைத் தயாரித்தார். பிரெஞ்சு நாட்டவரான எம்.கொன்ரே **(M.Conte)** என்பவர் 1795 இல் பென்சிலைத் தயாரித்து உலகிற்கு அறிமுகப்படுத்தினார்.



அந்நாட்களில் எழுத்துப்பிரதிகள் ஒவ்வொன்றும் கையாலேயே எழுதப்பெற்றதால் நாளடைவில் அலுப்புற்று இலகுவாக எழுதும் வழிகளை ஆராய்ந்ததன் பயனாய் அச்சியந்திரம் உருவாயிற்று. அச்சிடுதல் 1445 ஆம் ஆண்டில் ஒல்லாந்தில் அறிமுகப்பட்டிருந்தாலும் முதல் அச்சியந்திரம் 1477இல் வில்லியம் கக்ஸ்ரன் **(William Caxton)** என்ற ஆங்கிலேயரால் தயாரிக்கப்பட்டது. பின்னர் 1814 இல் ஜேம்ஸ்வாட் **(James Watt)** பொறிமுறை அச்சியந்திரங்கள் இரண்டை உருவாக்கினாார். சுழலும் அச்சுப்பொறிகள் 19ஆம் நூற்றாண்டில் தயாரிக்கப்பட்டன. அச்சிடுதல் மூலம் - புத்தகங்கள், கணக்குச்சிட்டைகள், துண்டுப் பிரசுரங்கள், கையேடுகள், பத்திரிகைகள் ஆகியவை வெளியிடப்பட்டன.

இன்று இந்த அச்சுப்பதிப்புகள் நவீன தொழில்நுட்பத்துடன் இணைந்ததாக வளர்ந்து விட்டன. யாழ்ப்பாணத்துக்கு ஒவ்செட் அச்சு இயந்திரம் வந்தபின்னர் தான் எத்தனை மாற்றங்கள் ஏற்பட்டுவிட்டன. இத்தனை அழகுடன் நமது ஈழநாட்டில் உங்கள் சிறுவர் அரங்கத்தை அச்சேற்றித்தர இந்த ஒவ்செற் அச்சியந்திரங்களும் கணினிகளும் எத்தனை பெரிய பங்கினை வகிக்கின்றன பார்த்தீர்களா...!

## உலகில் பெரியன சில



மிகப்பெரிய கண்டம் - ஆசியா
மிகப்பெரிய பாலைவனம் - சகாரா
மிகப்பெரிய ஜனநாயக நாடு - இந்தியா
மிகப்பெரிய தனிநாடு - பிரேசில்
மிகப்பெரிய இராச்சியம் - ரஷ்யா

ஆக்கம்
கே. கருணாகரன்
யா/ஹாட்லிக் கல்லூரி
பருத்தித்துறை.

## இளந்தேனீக்கள் கழகம்

நீங்கள் பதினைந்து வயதுக்குட்பட்டவரா?

அப்படியானால் நீங்களும் நமது ஈழநாடு சிறுவர் அரங்க 'இளந் தேனீக்கள்' கழகத்தில் அங்கத்தவராகலாம்.

இளந்தேனீக்கள் கழகம் உங்கள் ஆற்றலையும் திறன்களையும் வெளிப்படுத்தத் தயாராக இருக்கின்றது.

நீங்கள் செய்யவேண்டியது இதுதான்.

கீழ் உள்ள படிவத்தைப் பூரணப்படுத்தி உங்களின் தெளிவான புகைப்படம் ஒன்றுடன் எமக்கு அனுப்பி வையுங்கள்.

உங்கள் விபரங்கள் புகைப்படத்துடன் சிறுவர் அரங்கத்தில் பிரசுரமாவதுடன் இளந் தேனீக்கள் கழக உறுப்பினர் அட்டை விரைவில் உங்கள் வீடு தேடிவரும்.

விண்ணப்பங்கள் அனுப்பவேண்டிய முகவரி:-

இளந்தேனீக்கள் கழகம்
சிறுவர் அரங்கம்
நமது ஈழநாடு
267,நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

## மரநாய்

மரநாய் யொன்று மரமரியும்
பட்டறை யொன்றில் புகுந்ததாம்
அரமொன்றை யங்கே கண்டதாம்
ஆகாரம் மென்றே நக்கியதாம்

நக்கிய நக்கில் நாக்கில்
இரத்தம் மெல்ல அரும்பியதாம்
மக்கான அந்த மரநாய்க்கும்
மனதில் மகிழ்ச்சி வந்ததாம்

இரும்பில் இருந்து இரத்தம்
அரும்பு தென்ற நினைப்பில்
விரும்பி விரும்பி அதனை
மீண்டும் மீண்டும் நக்கியதாம்

அந்தோ பாவம் அதன்நாக்கு
அந்த அரத்தில் தேய்வுண்டு
மெத்தவும் பாழாய் போனதாம்
இறுதியில் துண்டாய் விழுந்ததாம்.

நா. காயத்திரி,
கொழும்புத்துறை துரையப்பா
வித்தியாலயம்.

## தமிழ் நூல்களும் அவற்றை இயற்றியவர்களும்.



கந்தபுராணம்- கச்சியப்ப சிவாச்சாரியார்
திருக்குறள்- திருவள்ளுவர்
திருமந்திரம்- திருமூலர்
பெரியபுராணம்- சேக்கிழார்
நன்னூல்- பவனந்தி முனிவர்
சிலப்பதிகாரம்- இளங்கோவடிகள்
மணிமேகலை- சீத்தலைச் சாத்தனார்
ஆத்திசூடி, கொன்றைவேந்தன்- ஔவையார்
அரிச்சந்திர புராணம்- வீரகவிராயர்
இரகுவம்ச புராணம்- அரசகேசரி

தொகுப்பு- பா.சர்மிளா
ஆண்டு-6
யா/மகாஜனக் கல்லூரி
தெல்லிப்பளை.

## இளந்தேனீக்கள் கழகம்
### விண்ணப்பம்



முழுப் பெயர் :......................................
கற்கும் பாடசாலை :......................................
கற்கும் தரம் :......................................
வீட்டு முகவரி :......................................
பிறந்த திகதி :......................................
ஆர்வமுள்ள துறைகள் :......................................
:......................................

................ திகதி
................................ ஒப்பம்

.......................... அதிபர்/ஆசிரியர் ஒப்பம்
.......................... பெற்றோர் ஒப்பம்

□ உலகில் மிகவும் வேகமாக வளரும் தாவரம் மூங்கிலாகும். மூங்கில் மரங்களில் உள்ள ஒரு இனம் ஒரு நாளைக்கு ஒரு மீட்டர் வரை வளர்ந்து விடுகின்றது. இதே வேகத்தில் வளர்ந்து, ஒரு வாரத்திலேயே இரணடு மாடிக் கட்டிடத்தின் கூரையை இந்த மூங்கில் மரம் வெகு சுலபமாகத் தொட்டு விடுகின்றது.

□ மெக்சிகோ நாட்டிலுள்ள சிக்காட் **(CYCAD)** என்றமரம் உலகிலேயே மிகவும் குறைந்த வேகத்திலேயே வளர்கின்றது. பத்து சென்ரி மீட்டர் உயரம் வளர இந்தச் செடிக்கு 120 ஆண்டு காலம் தேவைப்படுகிறதாம்!



## மரங்களைப் பற்றி தெரிந்து கொள்ளுங்கள்

□ எல்லாத் தாவரங்களும் விதையிலிருந்துதான் முளைக்கின்றன, என்று நீங்கள் நினைத்துக் கொண்டிருக்கிறீர்களா? அப்படியானால் அது தவறு. ஸ்ரோபரிச் செடி தனது தண்டை நிலத்திலே படரவிடும். அப்படிப் படரும் தண்டு, மண்ணிலே வேரை ஊன்றும், அந்த வேர்ப்பகுதியிலிருந்து செடி ஒன்று மெல்ல முளைக்கும், சில வார காலத்திற்குள்ளேயே அந்தத் தண்டிலே புதிய செடிகள் முளைத்து, வளர்ந்துவிடும்.

□ கொகொ-டி-மெர் **(COCO - DE - MER)** என்ற மரம் பெரிய விதைகளைத் தருகின்றது. இந்த விதை இருபது கிலோகிராம் நிறையுள்ளது. சிலவேளை இதன் கனம் தாங்காமல் மரமே வளைந்து விடுகிறதாம்.

□ மனிதர்கள் புல்லைத் தின்பார்களா என்று உங்களைக் கேட்டால் சிரிப்பு வருகிறதல்லவா? ஆனால் இது சிரிப்புக்குரிய கேள்வி அல்ல. ஏனென்றால் அரிசி, கோதுமை, சோளம், பார்லி, ஓட்ஸ் என்ற புற்களின் தானியங்களையே உலகின் பல பாகங்களிலுமுள்ள மனிதர்கள் உணவாகக் கொண்டுள்ளார்கள். ஆனால் - மாடுகள் மற்றும் ஏனைய மிருகங்களைப்போல, மனிதர்கள் புற்களைத் தின்பதில்லை. தானியங்களை அறுவடை செய்து, அவற்றைச் செம்மைப்படுத்தி உணவாக்கிக்கொள்கிறாா கள். புற்களைத் தள்ளி விடுகிறாாகள் அல்லது மிருகங்களுக்கு உணவாகப் பயன்படுத்துகிறார்கள்.

□ பாலைவனத்திலே ருசியான பழங்கள் கிடைக்குமா? கிடைக்குமே. பாலைவனத்தின் நடுவே உள்ள பசுந்தரையில் வளரும் ஈச்சமரங்கள் ருசியான பழங்களைத் தருகின்றன. ஆபிரிக்கா மற்றும் மத்திய கிழக்கிலே உள்ள பாலைவனங்களில் கடந்த 5000 ஆண்டு காலமாக மக்கள் இந்த இனிய பேரீச்சம் பழங்களைப் பறித்துத் தின்று வருகிறார்கள். ஆனால், எம்மில் பெரும்பாலானோர் பேரீச்சம் பழத்தைச் சாப்பிட்டிருக்கமாட்டோம். நாங்கள் சாப்பிடுவது பேரீச்சம் பழ வற்றலைத்தான்.

□ பாலைவனத் தாவரங்கள், தாகத்தோடுவரும் பிரயாணிகளுக்கு நீரைத் தருகின்றன. இத்தாவரங்களின் தண்டினை வெட்டி உறிஞ்சினால் அதிலிருந்து இனிய நீர் சுரக்கின்றது. என்ன அதிசயம் பார்த்தீர்களா!

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225108 www.eezhanadu.com

**சிந்தனைக்கு**

ஒரு சிறந்த சமூகத்தை உருவாக்குபவன்
ஒரு சிறந்த தலைவன்!

- எட்மண்ட் கியூக்

# நமது நோக்கு

## தனிமனிதனல்ல, தமிழினமே அவர் !

தேசியத் தலைவர் வே.பிரபாகரன் மீதான நீதிமன்றத் தீர்ப்பினைக் கண்டித்து- நேற்று யாழ்ப் பாணத்தில் நடாத்தப்பட்ட பேரணி, நீதிமன்றம் வழங்கியுள்ள தீர்ப்பிலும், மக்கள் தீர்ப்பு எத்தகைய பலம் வாய்ந்தது என்பதை அரசாங்கத்திற்கும், சர்வதேசத்திற்கும் உணர்த்தப் போதுமானதாகும்.

மாணவர்கள், ஆசிரியர்கள், அரச, அரசு சாரா ஊழியர்கள், தொழிலாளர்கள், விவசாயிகள், வர்த் தகர்கள் என ஆயிரக்கணக்கில் திரண்ட பொது மக்கள் - தலைவர் பிரபாகரன் மீதான தீர்ப்புக்கான எதிர்ப்பையும், கண்டனத்தையும் ஒரே குரலில் எழுப்பி, தமது ஏகோபித்த மன உணர்வை வெளிக் காட்டினர்.

நீதிமன்றங்கள் எத்தகைய தீர்ப்பினை வழங் கினாலும் - அவை மக்களுடைய தீர்ப்புக்கு முன் எம்மாத்திரம் என்ற உணர்வைத் தோற்றுவிப்பதாக, மக்களின் எழுச்சி காணப்பட்டது.

பிரபாகரன் மீதான தீர்ப்பை தமிழ்மக்கள் அங்கீ கரிக்கவில்லை என்பதையும், இத்தீர்ப்பின் பாதிப்பு- கடின முயற்சிகளின் பின் கிடைத்துள்ள சமாதான த்தையும், நல்லிணக்கத்தையும் பாரதூரமாகப் பாதி க்கக்கூடியது என்பதையும் - வெளியுலகத்திற்கு தெளிவாக எடுத்துச் சொல்வதாக தமிழ்மக்களின் வெளிப்பாடு இருந்தது.

யாழ். குடாநாட்டில் மட்டுமன்றி, நேற்று வவுனியா நகரிலும், ஒரு சில தினங்களுக்கு முன் மட்டக் களப்பிலும் - தமிழ்மக்கள் மிகப் பெருமெடுப்பில் திர ண்டு, தமது உணர்வுகளை வெளிக்காட்டியுள்ள னர்.

தனியே விடுதலைப்புலிகளின் தலைவர் என்றி ல்லாது - ஈழத்தமிழ் மக்களின் தேசியத் தலைவராக ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கும் வே.பிரபாகரன் மீதான விமர்சனத்தை, தம்மீதான பழியாகக் கரு தியே தமிழினம் இந்த எதிர்ப்பின் வழியே செய்தி சொல் லியிருக்கிறது.

இராணுவத்துறையில் மட்டுமன்றி, அரசியல் வழியிலும், இராஜதந்திர நுட்பங்களிலும் - மிகக் கைதேர்ந்தவராகக் காய்களை நகர்த்தி, இன்று ஈழத் தமிழ் மக்களின் பிரச்சினைகளை உலகறியச் செய்து, அதனை சர்வதேசப் பிரச்சினையாக்கி - தமிழ் மக்களின் விடிவுக்கான பாதையைத் தெளிவாக்க வரும் பிரபாகரன் மீதான தீர்ப்பு - ஒரு தனிமனித னுக்கு எதிரான தீர்ப்பாகக் கொள்ள முடியாது. ஒரு இனத்தை வழிநடத்தும் தலைவனுக்கு எதிரான தீர்ப்பாகவே கருதமுடியும்.

எனவே - தமது தலைவனுக்கு வரும் எந்தப் பாதிப்பும், தமிழினத்தை நேரடியாகவே பாதிக்கும் என்ற கட்டத்தில் தமிழ் மக்கள் இருப்பதையே இத் தகைய பேரணிகளும் ஆர்ப்பாட்டங்களும் எடுத்துக் காட்டுகின்றன.

அதிலும் - கடந்த காலங்களில், தமிழ்மக்கள் மீது ஏவிவிடப்பட்ட இரக்கமற்ற, மனிதாபிமானமற்ற இனப்படுகொலையால், அரச பயங்கரவாதத்தினால- ஏற்படுத்தப்பட்ட உயர்ப்பலிகளின் வடுக்களும், அழிவுகளின் துயரமும், சிதைந்துபோன வாழ்க்கை யும் - நெஞ்சங்களை விட்டு அகன்றுவிடாத நிலை யில்,

பாரபட்சமாக - ஒரு பக்க நியாயமென வெளியாகி யுள்ள தீர்ப்பைத் தமிழ்மக்கள் தமது ஒன்று திரண்ட எதிர்ப்பினால் நிராகரித்து விட்டார்கள் என்றே கொள்ளமுடியும்.

எனவே - அரசாங்கமும், சர்வதேசமும் இந்தத் தீர்ப்பினால் விளைந்துள்ள மனக்கசப்பை அகற் றவும், நிரந்தர சமாதானத்திற்கான செல்வழியில் உறுதியான இணக்கத்தைப் பேணவும் - முயற்சி செய்ய வேண்டுமென தமிழ்மக்கள் எதிர்பார்த் துள்ளனர்.

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில்
# உலக வங்கியின் உதவியுடன் மொழியியல் ஆய்வு கூடம்!

(யாழ்ப்பாணம்)

உலக வங்கியின் நிதிஉதவியுடன் யாழ்.பல்கலைக் கழகத்தில் மொழியியல் ஆய்வுகூடம் ஒன்று அமைக்கப்படவுள்ளது.

அதிநவீன வசதிகள் கொண்டதாகவும் சர்வதேச தரம் வாய்ந்ததாகவும் அமைக்கப்படவிருக்கும் இந்த ஆய்வு கூடத்தை அமைப்பதற்கான நிதி உதவியை உலகவங்கி வழங்க முன்வந்துள்ளது.

இம்முயற்சியின் முதற்கட்டமாக இந்த ஆய்வுகூடத்தை அமைப்பதற்குரிய செயற்திட்ட அறிக்கை ஒன்று தயாரிக்கப் பட்டுள்ளது. இச்செயற்றிட்டப் பிரதி ஒன்று ஏற்கனவே உலக வங்கியின் பரிசீலனைக்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. பல்கலைக்கழக மாணவர்களின் ஆங்கில மொழி அறிவை மேம்படுத்துவதற்கு மேற்படி மொழியியல் ஆய்வுகூடம் பெரிதும பயன்ட்டும் என்று நம்பப்படுகிறது.

இந்த ஆய்வு கூடம் அமைப்பது குறித்து உலகவங்கி அதிகாரிகளும் பல்கலைக்கழக அதிகாரிகளும் ஏற்கனவே கலந்துரையாடல் ஒன்றை நிறைவு செய்துள்ளனர்.

## வெடிப் பொருளைக் கையாண்ட மண்டூர் வாலிபர் படுகாயம்

(அம்பாறை)

வெடிபொருள் ஒன்றை எடுத்துக் கையாண்டபோது அது வெடித்ததில் இளைஞர் ஒருவர் படுகாயமடைந்த சம் பவமொன்று மட்டக்களப்பு மாவட்டம் மண்டூரில் இடம் பெற் றுள்ளது.

13ஆம் கொலனியைச் சேர்ந்த இரு இளைஞர்கள் நேற்று முன்தினம் மாலை வெடிபொருள் ஒன்றைக் கையாண்டபோது அது வெடித்தது. இச்சம்பவத்தில் நல்லதம்பி கிருபைரட்ணம் (வயது 22) என்பவர் பலத்த காயமடைந்து மட்டக்களப்பு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (08)

## நாவாந்துறையில் நள்ளிரவு திருட்டு முயற்சி தோல்வி!

(பாண்டியன் தாழ்வு)

நாவாந்துறை கெண்டி வீதியில் உள்ள வீடொன்றினுள் புகுந்த திருடர்கள் மின் இணைப்புக்களைத் துண்டித்து விட்டுத் திருட்டு முயற்சியில் ஈடுபட்டுக்கொண்டிருந்த வேளை வீட்டுக் காரர் எழுந்து கூச்சலிடவே- தமது திருட்டு முயற்சியைக் கைவிட டுத் தப்பியோடி விட்டனர்.

நேற்று அதிகாலை ஒரு மணியளவில் இடம்பெற்ற இச் சம்பவம் பற்றித் தெரியவருவதாவது- வீட்டில் உறக்கத்தி லிருந்த பெண் விழித்து திருடன் என்று கூச்சலிட அப் பெண்ணை தலையணையால் முகத்தில் அழுத்திக் கொலை முயற்சியில் ஈடுபட்டதை அவதானித்த சகோதரி "திருடன் திருடன்" என்று கத்தவே அயலவர்களும் உதவிக்கு வந்தனர். இதனால் திருடர்கள் தங்களின் குறடு மற்றும் அலவாங்கு போன்ற ஆயுதங்களைக் கைவிட்டுத் தப்பியோடி விட்டனர். (66)

# வெளிநாடுகளில் தொழில் புரிவோர் அனுப்பும் பணம் மீதானவரி ரத்து

## பிரதி நிதியமைச்சர் தெரிவிப்பு

வெளிநாடுகளில் தொழில் புரியும் இலங்கையர் அனுப்பு கின்ற பணத்துக்கு வரவு- செலவுத்திட்டத்தில் 15 சதவீத வரியை விதிக்க உத்தேசிக்கப்பட்ட தீர்மானத்தை அரசாங்கம் விலக்கிக் கொள்வதாக பிரதி நிதி அமைச்சர் பந்துல குணவர் த்தன தெரிவித்தார்.

நேற்று வரவு-செலவுத்திட்ட விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். வெளி நாடுகளில் பணிபுரியும் இலங்கையர்களிடம் இருந்து கிடைக்கின்ற வருமானம் இலங்கையின் தேசிய வருமானத் தில் 4 சதவீதம் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

வெளிநாடுகளிலிருந்து அனுப்பப்படும் பணத்துக்கு 15 சதவீத வரி விதிக்கும் தீர்மானத்தை கைவிடுவதான அறிவிப்பை நிதியமைச்சர் விரைவில் வெளியிடுவார் எனவும் அவர் தெரிவித்தார்.

# மாணவர்களுக்கான சீருடைகள் விநியோகிக்க 6 மில்லியன் சீருடைப் பொதிகள் தயார்!

## கல்வி அமைச்சின் மேலதிக செயலாளர் தில்லை நடராஜா அறிவிப்பு

பாடசாலை மாணவர்களுக்கு சீருடை வழங்குவதற்கான கூப்பன்களை அடுத்த வாரம் பிரதேச செயலாளர்களுக்கு அனுப்பி வைக்க உத்தேசித்திருப்பதாக கல்வி அமைச்சின் மேலதிக செயலாளர் தில்லை நடராஜா தெரிவித்துள்ளார்.

3.8 மில்லியன் கூப்பன்களை அனுப்புவதற்கு தயார் நிலையில் இருப்பதாகவும், கூப்பன்களை சம்பந்தப்பட்ட பகுதியில் சீருடை விநியோக உத்தரவு பெற்ற வியாபாரிக ளிடம் சமர்ப்பித்து சீருடைகளைப் பெற்றுக்கொள்ளலாம் என்றும்,

6 மில்லியன் சீருடைப் பொதிகள் இவ்வாறு விநியோகிக்கத் தயார் நிலையில் இருப்பதாகவும், அவற்றை அடுத்தமாத மளவில் பெற்றுக் கொள்ளலாம் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

# உடதலவின்ன படுகொலை வழக்கு கொழும்பு மேல் நீதிமன்றுக்கு மாற்றம்

(நமது நிருபர்)

உடதலவின்ன 10 பேர் படுகொலை சம்பந்தமாக தெல் தெனிய நீதிமன்றத்தில் நடைபெற்ற பூர்வாங்க விசாரணைகள் நேற்று முடிவடைந்தன.

இந்த வழக்கு எதிர்வரும் 15ஆம் திகதி கொழும்பு மேல நீதிமன்றத்தில் ஆரம்பமாகும்.

முன்னாள் அமைச்சர் அனுருத்த ரத்வத்த உட்பட சந்தேக நபர்கள் அனைவரையும் அன்றைய தினம் கொழும்பு மேல நீதிமன்றில் ஆஜராகுமாறு நீதவான் உத்தரவிட்டார்.

இந்தச்சம்பவம் தொடர்பாக அனுருத்த ரத்வத்த, அவரது இரண்டு புதல்வர்கள் 11 இராணுவ வீரர்கள் ஆகியோர் மீது குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டுள்ளன.

# குறைதீர் மன்றம்



எனது கணவர் கணபதிப்பிள்ளை சந்திரசேகரம் என்பவர் துணுக்காய் தபாலகத்தில் உப அதிபராகக் கடமையாற்றி 17.12.1984 ஆம் ஆண்டு மரணமடைந்து விட்டார். அவர் பணியில் சேரும்போது செலுத்திய பிணைப் பணம் **(Security)** இன்னமும் மீளக் கிடைக்கவில்லை. நான் ஜனாதிபதி செயலகம் முதல் தபால் மா அதிபர், தபால் தந்தித் தொலைத் தொடர்புகள் அமைச்சு ஆகியவற்றுக்கு பல தடவைகள் கடிதங்கள் எழுதியும் எவ்வித பதிலுமில்லை. ஈழநாடு பத்திரிகையில் குறைதீர் மன்றத்தில் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்பட்டதை அறிந்து இக்கடிதத்தை தங்களின் உதவியை நாடி எழுதுகிறேன். எனது கணவரால் கட்டப்பட்ட பிணைப் பணத்தையாவது பெற்றுத்தர உதவு மாறு உங்களின் மேலான உதவியை நாடியுள்ளேன்.

ச.புவனேஸ்வரி
"தேவதானம்"
துன்னாலை வடக்கு;
கரவெட்டி.

**நமது ஈழநாடு**

தங்களது விடயம் தொடர்பாக வட - மாகாண பிரதி அஞ்சல் நாயகம் அலுவலகத்தினை நமது ஈழநாடு தொடர்பு கொண்டபோது, 1998 இல் பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றத்திற்கு தங்கள் கணவரின் பிணைப்பணம் அனுப்பப்பட்டும், நீதிமன்றம் இயங்காதபடியால் பணம் மீளவும்- பிணைப்பணத்திற்குப் பொறுப்பாக உள்ள கணக் காளரிடம் கொழும்புக்கு திருப்பி அனுப்பப்பட்டு விட்டதாக தெரிய வந்தது. தற்பொழுது வட.மாகாணப் பிரதி அஞ்சல் நாயகம் அலுவலகம் பிணைப்பணத்தை மீளவும் நீதிமன்றத்துக்கு அனுப்புமாறு கோரியுள்ளது. எனவே, கால கதியில் பணத்தைப் பெறுமாறான அறிவித்தல் தங்களை வந்தடையும். தாங்கள் நீதிமன்றத்தில் பிணைப் பணத்தை விரைவில் பெற்றுக் கொள்ளலாம்.

# தமிழீழ மீட்புநிதி கடன் மீளல் - 2002

*நேற்றைய தொடர்ச்சி....*

## தெல்லிப்பளை உதவி அரச அதிபர் பிரிவு

001. யா/தெ/5 திருமதி நிர்மலா பொன்னப்பா
002. யா/தெ/7 திரு.சீவரத்தினம் பாலச்சந்திரன்
003. யா/தெ/10 செல்வி.ரஞ்சினி சுப்பிரமணியம்
004. யா/தெ/11 திருமதி சாந்தி சபேஸ்வரன்
005. யா/தெ/12 திருமதி ராயேஸ்வரி சிவபாதம்
006. யா/தெ/13 திரு.வேலுப்பிள்ளை இரத்தினசிங்கம்
007. யா/தெ/27 திரு.காசிப்பிள்ளை கந்தையா
008. யா/தெ/35 திருமதி விசாலாட்சி கந்தையா
009. யா/தெ/38 திரு.செல்லையா வேலாயுதபிள்ளை
010. யா/தெ/83 திரு.சின்னத்தம்பி பத்மநாதன்
011. யா/தெ/90 செல்வி.யசிதா தனபாலசிங்கம்
012. யா/தெ/94 செல்வி.மதிவதனா செல்லத்துரை
013. யா/தெ/113 திருமதி இரத்தினபூவதி நடராசா
014. யா/தெ/139 திருமதி பவுலீனா யோ்கரட்ணம் மரியதாசன்
015. யா/தெ/186 திருமதி இராசாத்தியம்மா அருளப்பு
016. யா/தெ/218 செல்வி.சூரியகுமாரி குமரையா
017. யா/தெ/221 திரு.கணபதிப்பிள்ளை தம்பிராசா
018. யா/தெ/242 திரு.செல்லையா பூலோகேந்திரன்
019. யா/தெ/283 திரு.குருநாதபிள்ளை ஆறுமுகம்
020. யா/தெ/309 திருமதி கண்மணி சிவசுப்பிரமணியம்
021. யா/தெ/355 திரு.செல்லர் சின்னத்துரை
022. யா/தெ/376 திருமதி ஜெகசோதி கருணாகரன்
023. யா/தெ/387 திரு.குமரகுரு சசீதரன்
024. யா/தெ/411 திரு.கந்தையா தவராஜசிங்கம்
025. யா/தெ/427 திருமதி வள்ளியம்மை வேலாயுதம்
026. யா/தெ/436 திருமதி தேவகி பூபாலசிங்கம்
027. யா/தெ/437 செல்வி.சரோஜினி சுப்பிரமணியம்
028. யா/தெ/449 திரு.தில்லையம்பலம் மார்க்கண்டு
029. யா/தெ/458 செல்வி.உமைபாலகி சுப்பிரமணியம்
030. யா/தெ/502 திரு.சேனாதிராசா இராசரத்தினம்
031. யா/தெ/621 திருமதி இராசம்மா இரத்தினம்
032. யா/தெ/627 திரு.கதிரித்தம்பி முரகையா
033. யா/தெ/628 திருமதி அன்னபூரணம் சிவகுரு
034. யா/தெ/689 திருமதி கௌசலாதேவி அருச்சுனராசா
035. யா/தெ/721 திரு.கனகசபை பொன்னையா
036. யா/தெ/764 செல்வி.பூர்ணிமா சோமசேகரன்
037. யா/தெ/787 திருமதி லீலாவதி குணராசசிங்கம்
038. யா/தெ/832 திரு.பொன்னுத்துரை முரளிதரன்
039. யா/தெ/862 திரு.பொன்னம்பலம் சண்முகராசா
040. யா/தெ/871 திரு.கிருஸ்ணபிள்ளை மகேஸ்வரன்
041. யா/தெ/888 திரு.சிவப்பிரகாசம் திருநாவுக்கரசு
042. யா/தெ/900 திரு.மாரிமுத்து நற்குணம்
043. யா/தெ/905 திரு.இராசையா சுந்தரலிங்கம்
044. யா/தெ/913 திரு.ஆசீர்வாதம் பெனடிற் இராசதுரை
045. யா/தெ/915 திருமதி நாகேஸ்வரி சிவப்பிரகாசம்
046. யா/தெ/922 திரு.வன்னியசிங்கம் குகவேள்
047. யா/தெ/930 திருமதி கலைமகள் திருநாதன்
048. யா/தெ/950 திரு.சிவசுப்பிரமணியம் சிவகரன்
049. யா/தெ/957 திரு.சவிரிமுத்து பெனடிற் ஜோசப்லாபர்
050. யா/தெ/958 திருமதி நாகம்மா நாகலிங்கம்
051. யா/தெ/971 திரு.சிவதாசன் நித்தியானந்தம்
052. யா/தெ/976 திருமதி நவமணி ஞானலிங்கம்
053. யா/தெ/981 திரு.இராஜசௌந்தரம் ஜோ இன்பராஜ்
054. யா/தெ/990 திருமதி வள்ளியம்மை சின்னத்தம்பி
055. யா/தெ/991 திருமதி சாந்தாம்பாள் சேனாதிராசா
056. யா/தெ/997 திரு.நடராஜசிங்கம் கிருபாகரன்
057. யா/தெ/1036 திரு.ஆறுமுகம் கணபதிப்பிள்ளை
058. யா/தெ/1089 திரு.தம்பிப்பிள்ளை சண்முகநாதன்
059. யா/தெ/1139 செல்வி.பிரபா சிவசுப்பிரமணியம்
060. யா/தெ/1178 திரு.முத்துநாயகம் இராஜ்மோகன்
061. யா/தெ/1226 திரு.அப்பர்சுவாமி அண்ணாமலை
062. யா/தெ/1231 திருமதி சூரியகலா ஜீவரட்ணம்
063. யா/தெ/1253 திரு.சதாசிவக்குருக்கள் திருச்செந்தில்நாத சர்மா
064. யா/தெ/1273 திரு.கந்தசாமி.உமாசங்கர்
065. யா/தெ/1343 திரு.வேலுப்பிள்ளை தம்பிராஜா
066. யா/தெ/1355 திரு.நடராசா தனபாலன்
067. யா/தெ/1428 திரு.அம்பலவாணர் சின்னத்தம்பி
068. யா/தெ/1438 திரு.கிருஷ்ணர் வைகுந்தன்
069. யா/தெ/1451 திருமதி மனோரஞ்சிதமலர் சிவசுப்பிரமணியம்
070. யா/தெ/1453 திரு.கந்தையா கார்த்திகேசு
071. யா/தெ/1469 திரு.இராசரட்ணம் ஜெயமனோகர்
072. யா/தெ/1487 திரு.கதிர்காமு சின்னத்துரை
073. யா/தெ/1550 திருமதி சிவபாக்கியம் ஆறுமுகம்பிள்ளை
074. யா/தெ/1600 திரு.அந்தோனி தேவசகாயம்
075. யா/தெ/1633 திரு.இராமலிங்கம் இராசலிங்கம்
076. யா/தெ/1642 செல்வி.ராகினி இராசரெத்தினம்
077. யா/தெ/1653 திரு.இளையவி வல்லிபுரம்
078. யா/தெ/1663 திரு.நாகமணி சிவசுப்பிரமணியம்
079. யா/தெ/1668 திரு.பொன்னம்பலம் சண்முகலிங்கம்
080. யா/தெ/1692 திரு.கந்தசாமி சித்திவினாயகவடிவேல்
081. யா/தெ/1695 திரு.முத்துக்குமார் கந்தசாமி
082. யா/தெ/1826 திரு.கந்தப்பு கனகசிங்கம்
083. யா/தெ/1852 திரு.பொன்னையா தங்கராசா
084. யா/தெ/1928 திருமதி இராஜேஸ்வரி தியாகராசா
085. யா/தெ/1982 திரு.வல்லிபுரம் செந்திவேற்பிள்ளை
086. யா/தெ/2021 திரு.தம்பையா துரைசிங்கம்
087. யா/தெ/2062 திருமதி செல்வராணி மாணிக்கசுந்தரம்
088. யா/தெ/2075 திரு.தம்பு சேவரத்தினம்
089. யா/தெ/2084 திருமதி சரஸ்வதி இராசா
090. யா/தெ/2090 திரு.ச.வயிரமுத்து இரத்தினம்
091. யா/தெ/2092 திருமதி கனேகேஸ்வரி சோமநாதன்
092. யா/தெ/2123 திருமதி நாகரத்தினம் பத்மநாதன்
093. யா/தெ/2127 திரு.ஐயம்பிள்ளை மகேஸ்வரன்
094. யா/தெ/2211 திருமதி சிவஞானவதி ஏரம்பமூர்த்தி
095. யா/தெ/2222 திரு.பொன்னம்பலம் முத்துக்குமாரு
096. யா/தெ/2293 செல்வி.சிவாஜினி இரத்தினகோபால்
097. யா/தெ/2309 திரு.நாகமணி சின்னத்துரை
098. யா/தெ/2343 திரு.தம்பு மயில்வாகனம் ராமகிருஷ்ணன்
099. யா/தெ/2394 திருமதி ஞானம்பாள் பாலசிங்கம்
100. யா/தெ/2396 திரு.வயிரவன் அருணாசலம்
101. யா/தெ/2457 திருமதி செல்லம்மா கந்தசாமி
102. யா/தெ/2492 செல்வி.சித்திராங்கனி மஞ்சுளா முத்துக்குமாரு
103. யா/தெ/2540 திரு.செம்பாப்போடி வயந்தராசபிள்ளை
104. யா/தெ/2547 திரு.நமசிவாயம் சிவலிங்கம்
105. யா/தெ/2551 திருமதி மங்கையற்கரசி இளையதம்பி
106. யா/தெ/2597 திருமதி பரிமளம் கந்தையா
107. யா/தெ/2695 திரு.வடிவேலு தம்பிராசா
108. யா/தெ/2728 திரு.வரத இரத்தினராசா குணசீலன்
109. யா/தெ/2732 திருமதி சுகுணா கேசவமூர்த்தி
110. யா/தெ/2826 திரு.சடாட்சரம் ஞானச்சந்திரன்
111. யா/தெ/2829 செல்வி.ஜெயரஞ்சினி சபாரட்ணம்
112. யா/தெ/2976 திருமதி தேவி குணசேகரம்
113. யா/தெ/3042 திரு.வேலுப்பிள்ளை தில்லைநாதன்
114. யா/தெ/3076 திரு.ஐயாத்துரை மனோரஞ்சன்
115. யா/தெ/3129 திருமதி பரிமளம் சுப்பிரமணியம்
116. யா/தெ/3135 திருமதி மங்கையற்கரசி கனகரத்தினம்
117. யா/தெ/3166 திருமதி இராசமணி குருநாதபிள்ளை
118. யா/தெ/3185 திருமதி ஜெயந்தி தர்மராசா
119. யா/தெ/3224 திரு.நவரட்ணசிங்கம் வவா
120. யா/தெ/3259 திருமதி வதனி பாஸ்கரன்
121. யா/தெ/3264 திரு.கந்தன் இரத்தினவடிவேல்
122. யா/தெ/3344 திரு.காசிப்பிள்ளை முருகுப்பிள்ளை
123. யா/தெ/3361 திரு.அரியரட்ணம் பாஸ்கரன்
124. யா/தெ/3362 திரு.குகேந்திரன் விஜயகுமார்
125. யா/தெ/3402 திரு.வைரமுத்து தவராஜா
126. யா/தெ/3465 திரு.கந்தர் சின்னப்பு
127. யா/தெ/3502 திரு.சுப்பிரமணியம் விஜயராகவன்
128. யா/தெ/3548 திரு.சுப்பிரமணியம் சுந்தரமூர்த்தி
129. யா/தெ/3559 திருமதி குழந்தை ஐயங்கார்
130. யா/தெ/3592 திரு.வீரகத்தி பொன்னப்பா
131. யா/தெ/3610 திருமதி பவானி ஜெயராசா
132. யா/தெ/3613 திருமதி லலிதா கந்தசாமி
133. யா/தெ/3618 திருமதி அருந்ததி தருமராசா
134. யா/தெ/3652 திரு.அருளம்பலம் யோகலிங்கம்
135. யா/தெ/3671 திருமதி இலட்சுமி சபாரத்தினம்
136. யா/தெ/3841 திருமதி செல்வபாக்கியம் கிட்டினர்
137. யா/தெ/3902 திரு.சண்முகம் கந்தையா
138. யா/தெ/3928 திருமதி சிசிலியா செபமாலை
139. யா/தெ/3956 திருமதி இராசகுமாரி சந்திரபோஸ்
140. யா/தெ/3963 திரு.வேலன் கந்தசாமி
141. யா/தெ/3970 திருமதி மாகிரெட் மரியசீலி சைமன்
142. யா/தெ/4010 திருமதி இராசேஸ்வரி நடராஜா
143. யா/தெ/4022 திருமதி சிந்தாதிரையம்மா அந்தோனிப்பிள்ளை
144. யா/தெ/4086 திரு.வல்லிபுரம் ஜெயராஜா
145. யா/தெ/4134 திரு.சிவலிங்கம் துரைசிங்கம்
146. யா/தெ/4138 திரு.சரவணமுத்து லோகநாதன்
147. யா/தெ/4158 திருமதி லட்சுமி சின்னத்துரை
148. யா/தெ/4163 திரு.கதிரவேலு செல்லையா
149. யா/தெ/4174 திரு.தியாகராசா கணேசமூர்த்தி
150. யா/தெ/4192 திரு.சின்னையா இராசையா
151. யா/தெ/4216 திருமதி ஜெகதீஸ்வரி யோகராசா
152. யா/தெ/4261 திருமதி செல்வராணி நமசிவாயம்
153. யா/தெ/4266 செல்வி.இராசலட்சுமி தம்பு
154. யா/தெ/4409 செல்வி.விமலா இராமலிங்கம்
155. யா/தெ/4423 திரு.யோசேப் குலசேகரம் கிருபைநாதன்
156. யா/தெ/4443 திரு.வேலாயுதம் கிருபாகரன்

## பருத்தித்துறை உதவி அரச அதிபர் பிரிவு

001. யா/பரு/6 திருமதி சியாமளா சுந்தரலிங்கம்
002. யா/பரு/8 திருமதி சிவனேசம்மா விசாகரத்தின ஐயர்
003. யா/பரு/10 திரு.சிதம்பரப்பிள்ளை நல்லையா
004. யா/பரு/16 திருமதி தங்கமணி குமரகுரு
005. யா/பரு/20 திருமதி தவமணி தம்பு
006. யா/பரு/49 திரு.நடராசா கனகசபை
007. யா/பரு/55 திரு.இராமசாமி வயித்திலிங்கம்
008. யா/பரு/63 திரு.செல்வச்சிவம் தெய்வச்சந்திரன்
009. யா/பரு/82 திரு.விசுவலிங்கம் தணிகாசலம்
010. யா/பரு/90 திரு.சண்முகம் இராசலிங்கம்
011. யா/பரு/91 திரு.குமாரசாமி தருமராசா
012. யா/பரு/97 திருமதி இந்துமதி ஜெயகோபால்
013. யா/பரு/99 திரு.துரைசாமி செல்வமாணிக்கம்
014. யா/பரு/109 திருமதி செல்வராணி கந்தசாமியார்
015. யா/பரு/125 திரு.நடனசிகாமணி பாலேந்திரன்
016. யா/பரு/132 திரு.சந்திரலிங்கம் பார்த்தீபன்
017. யா/பரு/135 திரு.நாராயணசாமி கலைநேசன்
018. யா/பரு/142 திரு.ஆறுமுகக்கடவுள் சுபாஸ்ரஞ்சன்
019. யா/பரு/149 திரு.கந்தசாமித்துரை பாலேந்திரன்
020. யா/பரு/157 திருமதி அற்புதமலர் நித்தியானந்தம்
021. யா/பரு/161 திருமதி நவரத்தினம்மா கதிர்காமத்தம்பி
022. யா/பரு/168 திருமதி புஸ்பராணி வேலுச்சாமி
023. யா/பரு/172 திரு.வேலுப்பிள்ளை சுந்தரசிகாமணி
024. யா/பரு/191 திரு.செங்கல்வராசா சக்திவேல்
025. யா/பரு/195 திரு.சிவப்பிரகாசம் சிதம்பரநாதன்
026. யா/பரு/204 திரு.தங்கேஸ்வரராஜா ஜெயராஜ்
027. யா/பரு/209 திரு.மாணிக்கராசா சண்முகலிங்கம்
028. யா/பரு/216 திருமதி நாகசுந்தரேஸ்வரி இராமநாகதாசன்
029. யா/பரு/246 திரு.முருகுப்பிள்ளை பிறேம்குமார்
030. யா/பரு/283 திருமதி கமலாதேவி இராமச்சந்திரன்
031. யா/பரு/290 திரு.இரத்தினசபாபதிசர்மா வெங்கட்ராமன்
032. யா/பரு/304 திரு.கிருஷ்ணசாமி அருளானந்தன்
033. யா/பரு/332 திருமதி பத்மாவதி பாலசுப்பிரமணியம்
034. யா/பரு/378 திரு.கதிரவேற்பிள்ளை யோகனந்தசாமி
035. யா/பரு/420 திருமதி ஜெயநந்தினி ஜெயபாலன்
036. யா/பரு/440 திரு.பாலசுந்தரம் உதயகுமார்
037. யா/பரு/451 திருமதி விமலாதேவி உலகபாஸ்கரம்பிள்ளை
038. யா/பரு/458 திரு.வேலுப்பிள்ளை கதிர்காமலிங்கம்
039. யா/பரு/462 திரு.ஞானப்பிரகாசம் தேவதாஸ்
040. யா/பரு/465 திரு.வல்லிபுரம் சிவானந்தம்
041. யா/பரு/521 திரு.வேலுப்பிள்ளை விஸ்வலிங்கம்
042. யா/பரு/577 திரு.வடிவேலு சதானந்தம்
043. யா/பரு/592 திரு.கருப்பன் இடையான் லக்ஷ்மணன்
044. யா/பரு/616 திருமதி.தங்கரத்தினம் வேலாயுதம்
045. யா/பரு/640 செல்வி.காயத்திரி பஞ்சரட்ணம்
046. யா/பரு/643 திருமதி அருந்தவதேவி சுந்தரலிங்கம்
047. யா/பரு/646 திருமதி நிர்மலாதேவி நடராஜா
048. யா/பரு/648 திருமதி பிரேமாவதி சாந்தலிங்கம்
049. யா/பரு/678 திரு.இராசரத்தினம் ரவீந்திரன்
050. யா/பரு/693 திருமதி கலாநிதி ஸ்ரீமுருகன்
051. யா/பரு/695 திரு.கந்தவனம் கனகரத்தினராசா
052. யா/பரு/729 திருமதி கமலேஸ்வரி சீவரத்தினம்
053. யா/பரு/733 திரு.வேலுப்பிள்ளை வீரகத்தி இராமநாதன்
054. யா/பரு/745 திரு.பொன்னுத்துரை தேவகுலேந்திரன்
055. யா/பரு/768 திரு.கோபால் சௌந்தரராஜா
056. யா/பரு/789 திருமதி பரமேஸ்வரி சிவச்செல்வம்
057. யா/பரு/793 திருமதி அபிராமிப்பிள்ளை பாலசிங்கம்
058. யா/பரு/814 திருமதி செல்வசிரோன்மணி இராமேஸ்வரன்
059. யா/பரு/815 திருமதி இந்திராணி சதாசிவம்
060. யா/பரு/820 திருமதி அருட்புவனம் சௌந்தரராஜா
061. யா/பரு/855 செல்வி.சிவானந்தி பரமலிங்கம்
062. யா/பரு/867 செல்வி.தேவசுந்தரி சோமசேகரம்
063. யா/பரு/909 திருமதி காந்திமதி நவரட்ணம்
064. யா/பரு/918 திருமதி பரமேஸ்வரி கணபதிப்பிள்ளை
065. யா/பரு/925 திரு.பொன்னையா பாலசுப்பிரமணியம்
066. யா/பரு/930 திரு.ஆறுமுகம் சிவானந்தன்
067. யா/பரு/937 திருமதி வனிதாதேவி ஜெயராசா
068. யா/பரு/991 திருமதி சிவமங்களம் கமலேஸ்வரன்
069. யா/பரு/1026 திருமதி கிருஷ்ணவேணி பத்மராசா
070. யா/பரு/1044 திருமதி புனிதவதி செல்வராசா
071. யா/பரு/1053 திரு.கிருஷ்ணபிள்ளை இராசையா
072. யா/பரு/1182 செல்வி.செல்வராஜினி சதானந்தர்
073. யா/பரு/1192 திரு.சீவரத்தினம் வடிவேலு
074. யா/பரு/1206 திரு.பிரான்சிஸ் அல்போன்ஸ்
075. யா/பரு/1223 திருமதி.மங்களேஸ்வரி புவனேந்திரன்
076. யா/பரு/1226 திருமதி.கமலாதேவி கந்தசாமி
077. யா/பரு/1231 திரு.தம்பிராசா செல்வராசா
078. யா/பரு/1236 திருமதி மேரிஆன் ஜெயராணி ஜோன் கிறிஸ்ரி
079. யா/பரு/1319 திருமதி இராஜேஸ்வரி யோசேப்பு
080. யா/பரு/1326 திரு.கந்தையா சுந்தரலிங்கம்
081. யா/பரு/1402 திருமதி மண்டலநாயகி சுந்தரலிங்கம்
082. யா/பரு/1403 திரு.இரத்தினவேலு ஹரிதாஸ்
083. யா/பரு/1498 திருமதி நாகரட்ணம் நடராஜா
084. யா/பரு/1520 திருமதி ஸ்ரீரஞ்சினி வரதராஜா
085. யா/பரு/1534 திரு.சுப்பையா உதயகுமார்
086. யா/பரு/1536 திருமதி யசிந்தா இமானுவல்
087. யா/பரு/1553 திருமதி திலகவதி ஜெகதீஸ்வரன்
088. யா/பரு/1723 திருமதி சகுந்தரநாயகி விக்னேஸ்வரன்
089. யா/பரு/1774 திரு.கதிரிப்பிள்ளை சின்னத்தம்பி
090. யா/பரு/1779 திருமதி கேதாரேஸ்வரி தருமரத்தின ஐயர்
091. யா/பரு/1806 திரு.ஞானசகாயம் செல்வகுமார்
092. யா/பரு/1816 திருமதி சுபத்திராதேவி யோகராஜா
093. யா/பரு/1823 திரு.சண்முகம் கதிரமலை குருநாதன்
094. யா/பரு/1918 திருமதி தங்கலெட்சுமி செல்வராசா
095. யா/பரு/1928 திரு.அருளம்பலம் பிறேமதாஸ்
096. யா/பரு/1986 திரு.சுப்பிரமணியம் சாந்தகுணவடிவேல்
097. யா/பரு/2039 திரு.கந்தசாமித்துரை ஜெயசோதி
098. யா/பரு/2044 திருமதி வசந்தாதேவி சிவானந்தவேல்
099. யா/பரு/2048 திருமதி பிறேமா ஸ்ரீக்குமார்
100. யா/பரு/2170 திருமதி மகாலஷ்மி பிறேம்பாபு
101. யா/பரு/2200 திரு.சின்னையா குமாரசாமி
102. யா/பரு/2273 திரு.குலசிங்கம் பேரின்பநாதன்
103. யா/பரு/2352 திருமதி மாசிலாதேவி இரத்தினசிங்கம்
104. யா/பரு/2376 திரு.கணபதிப்பிள்ளை திருநாவுக்கரசு
105. யா/பரு/2395 திருமதி இந்திராணி வயிரமுத்து
106. யா/பரு/2406 செல்வி.இந்திராணி வல்லிபுரம்
107. யா/பரு/2530 திருமதி கமலாதேவி அருளானந்தம்
108. யா/பரு/2602 திருமதி புனிதவதி தங்கராசா
109. யா/பரு/2613 திருமதி இலட்சுமிப்பிள்ளை பொன்னையா
110. யா/பரு/2671 திருமதி பரமேஸ்வரி கணபதிப்பிள்ளை
111. யா/பரு/2713 திருமதி நாகரஜனி கருணானந்தராஜா
112. யா/பரு/2851 திருமதி சுமதி சிறிலோகராசா
113. யா/பரு/2919 திருமதி மங்களேஸ்வரி குழந்தைவேற்பிள்ளை
114. யா/பரு/2934 திருமதி பவானி கிருஷ்ணகுமார்
115. யா/பரு/3092 திருமதி ஜசிந்தா ஜீவபாலநேசன்
116. யா/பரு/3147 திருமதி கேசில் அந்தோனிப்பிள்ளை
117. யா/பரு/3283 திரு.ஆழ்வார் முருகேசு
118. யா/பரு/3348 திருமதி பாமா சந்திரகுமாரன்
119. யா/பரு/3402 திரு.வேலும்மயிலும் காசிதாசன்
120. யா/பரு/3500 திரு.இராசையா சுப்பிரமணியம்
121. யா/பரு/3572 திரு.தர்மலிங்கம் யோகராசா
122. யா/பரு/3659 திரு.கிறிஸ்தோபர் அன்ரனிராசா
123. யா/பரு/3734 திரு.மாணிக்கம் சிவகுருநாதன்
124. யா/பரு/3762 திருமதி மகேந்திரராணி சின்னத்தம்பி
125. யா/பரு/3869 திரு.வேலன் கோபாலு
126. யா/பரு/3967 திரு.இராசையா பாலேந்திரன்
127. யா/பரு/4021 திருமதி சிவஞானம் ஞானசூரியம்
128. யா/பரு/4114 திரு.சிலுவேஸ்திரி வரப்பிரகாஸம்
129. யா/பரு/4153 திருமதி ஈஸ்வரியம்மா சரவணமுத்து
130. யா/பரு/4218 திரு.பரமு சபாரட்ணம்
131. யா/பரு/4230 திரு.சுப்பையா நடேசு
132. யா/பரு/4278 செல்வி.பிறேமலதா சின்னத்துரை
133. யா/பரு/4282 திரு.தங்கராசா நவீந்திரராசா
134. யா/பரு/4312 திரு.வேலாயுதம் மகேஸ்வரன்
135. யா/பரு/4315 திருமதி ஈஸ்வரி இராச்நாயகம்
136. யா/பரு/4354 திருமதி யோகாம்பிகை பரஞ்சோதி

## சங்கானை உதவி அரசாங்க அதிபர் பிரிவு

001. யா/ச/8 திரு.ஞானரத்தினம் பரமேஸ்வரன்
002. யா/ச/11 திரு.கார்த்திகேசு சதாசிவம்பிள்ளை
003. யா/ச/14 திரு.தம்பையா சோமஸ்கந்தசாமி இராசேந்திரம்
004. யா/ச/35 திருமதி மகேஸ்வரன் சுகுமாரன்
005. யா/ச/42 திருமதி செல்லம்மா கிருஷ்ணன்
006. யா/ச/44 திரு.தம்பிநாதபிள்ளை சண்முகம் தம்பையா
007. யா/ச/57 திருமதி சுலொசனா நவரத்தினராசா
008. யா/ச/60 திரு.கனகர் பாலசிங்கம்
009. யா/ச/67 திருமதி ஞானம்மா லோகேஸ்வரன்
010. யா/ச/92 திரு.செல்லத்துரை பத்மநாதன்
011. யா/ச/124 திரு.இராசரத்தினம் தர்மபாலன்
012. யா/ச/133 திருமதி மகேஸ்வரி அருணாசலம்
013. யா/ச/136 திருமதி கங்காதேவி தனபாலசிங்கம்
014. யா/ச/176 திரு.கனகர் பாலசிங்கம்
015. யா/ச/266 திருமதி புவனேஸ்வரி அருச்சுன்ன்
016. யா/ச/277 திருமதி இந்திராணி சோமஸ்கந்தன்
017. யா/ச/287 திரு.முருகேசு பேசன் சிறிரஞ்சன்
018. யா/ச/322 திருமதி சறோஜினிதேவி சிவஞானரட்ணம்
019. யா/ச/349 திரு.பசுபதி யோகராசா
020. யா/ச/361 திருமதி கமலாம்பாள் தெய்வேந்திரம்

(நாளை தொடரும்)

# தலைவர் பிரபா மீதான தீர்ப்பைக் கண்டித்து வவுனியாவில் நடைபெற்ற பேரணியின்போது..












படங்கள்: கனகரவி

# தீர்ப்பினை மீளப்பெற வேண்டும் இல்லையேல் போராட்டம் தொடரும்

## பிரதமர் ரணிலுக்கு மகஜர் மூலம் வலியுறுத்து

(யாழ்ப்பாணம்)

"விடுதலைப்புலிகளின் தலைவர் வே.பிரபாகரன் மீதான நீதிமன்றத் தீர்ப்பை அரசு மீளப் பெற்றுக் கொள்ள வேண்டும். இல்லையேல் நாடளாவிய மக்கள் போராட்டம் ஒன்றை நடாத்துவோம். இவ்வாறான தொடர் போராட்டம் ஒன்றை அரசு சந்திக்க வேண்டி ஏற்படும்" இவ்வாறு யாழ்.நகரில் நேற்று நடாத் தப்பட்ட ஆர்ப்பாட்டப் பேரணியின் இறுதியில் யாழ்.செயலகத்தில் சமர்ப் பிக்கப்பட்ட கண்டன மகஜரில் தெரி விக்கப்பட்டுள்ளது.

பிரதம மந்திரி ரணில் விக்கிரம சிங்கவுக்கு முகவரியிடப்பட்ட இம் மகஜரின் பிரதிகள் பாதுகாப்பு அமைச்சர், நீதி அமைச்சர் ஆகியோ ருக்கும் இலங்கையில் உள்ள அனைத்து வெளிநாட்டுத் தூதரகங் களுக்கும் அனுப்பி வைக்கப்பட் டன.

மேற்படி கண்டன மகஜரின் முழு விபரம் வருமாறு-

ஆயுத மோதலுக்கு ஒரு முடிவு கட்டி சமாதானப் பேச்சுக்கள் நல்ல சூழ்நிலையில் நிகழ்ந்து கொண்டி ருக்கும் இவ்வேளையில் - மத்திய வங்கிக் குண்டுத் தாக்குதல் வழக் கில், விடுதலைப் புலிகளின் தலை வர் வேலுப்பிள்ளை பிரபாகரனுக்கு, ஸ்ரீலங்கா மேல் நீதிமன்றத்தினால் 200 வருட கடூழியச் சிறைத்தண் டனை வழங்கிய முறையானது தமிழ் மக்களை மாத்திரமன்றி சமா தானத்தை நேசிக்கின்ற மக்கள் மத் தியில் பெரும் ஏமாற்றத்தையும் எதிர்கால வாழ்வின் நம்பிக்கை யையும் தகர்த்ததாகவே கருதுகின் றோம்.

கடந்த காலங்களில் நிகழ்ந்த சில அரசியற் பிரச்சினைகளை குறு கிய வரலாற்றுக் கண்ணோட்டத்தில் அணுகியதால் ஏற்பட்ட விளைவின் வக்கிரமாகவே இதை நாம் கருது வது மட்டுமல்லாது, தமிழீழ மக்க ளின் தேசியப் பிரச்சினைகள் குறித்து சிங்கள, தமிழ்ச் சமூகங்கள் மத்தி யில் துளிர்விட்ட உணர்வும், உற வும் வேறுபட்ட பார்வைக்குத் தூப மிடும் செயலாகவே இதை நாம் கருது கிறோம். நீதிமன்றத்தை நாம் மதிக் கின்றோம். ஆனால் இந்த நீதிமன் றத்தின் தீர்ப்பானது குறுகிய அர சியல் கண்ணோட்டம் ஆழப்பு தைந்த வெளிப்பாட்டின் அடையாள மாகும். காலங் காலமாக இனவாத அரசியலில் புரையோடிக் கிடந்த பேரினவாதிகளுக்கும், சமாதானத் துக்கு எதிரான தீய சக்திகளுக்கும் நல்ல தீனியாக அமைந்துள்ளதை


உங்கள் அன்புச் செல்வங்களின் பிறந்தநாள் வாழ்த்துக்கள்

நமது ஈழநாட்டில்!

முற்றிலும் இலவசமாக!!

உங்களது பத்து வயதுக்குட்பட்ட சிறார்களின்
பிறந்த நாள் கொண்டாட்டங்களில் "நமது ஈழநாடும்" இணைகின்றது!
உங்களது சிறாரின் புகைப்படத்துடன்
கீழ்வரும் கூப்பன்களில் மூன்றினை நிரப்பி எமக்கு அனுப்பி வையுங்கள்!
உங்கள் செல்வத்தின் பிறந்த நாளன்று நமது ஈழநாடும்,
புகைப்படத்துடன் பிறந்த நாள் செய்தியைப் பிரசுரிக்கும்.

வாழ்க வளமுடன்!

சிறாரின் பெயர் :....................

முகவரி :....................

பிறந்த ஆண்டு :....................



கூப்பன்கள் மூன்றும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

....................
பெற்றார் ஒப்பம்


## வவுனியாவில் விடுதலைப்புலிகளுடன் இணைய விரும்பிய ராணுவச் சிப்பாய்



நேற்று முன்தினம் வவுனியாவில் புலிகள் இயக்கத்தில் இணைய விருப்பம் தெரிவித்து சரணடைந்த இராணுவச்சிப்பாயைப் படத்தின் இடது பக்கத் திலும் வவுனியா மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் எழிலனை வலது பக்கத்திலும் காணலாம். (படம்: கனகரவி)


வாழ்க வளமுடன்

நமது ஈழநாட்டின் பிறந்தநாள் வாழ்த்துக்கள்

HAPPY BIRTHDAY

நான்காவது பிறந்தநாள்

பெயர் : ஸ்ரீ.ஹர்ஷனா

முகவரி: 651, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்





பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றோம்

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

**COMPUTER ELECTRONIC SYSTEMS (PVT) LTD**

- கணினியில் முன்னனுபவம் இல்லாதவர்களிற்கு தனிப்பட்ட முறையில் விசேட கவனம் செலுத்தப்படும்.
- சிறுவர்களிற்கான அறிமுக வகுப்புக்கள், games, மற்றும் விசேட வகுப்புக்கள்.

கணினி உலகில் முன்னணியில் திகழ இன்றே நாடுங்கள்!!

CES
Computer Electronic Systems (Pvt) Ltd.
No.223,Kasthuriyar Road,
Jaffna.
(Opposide of J/Hindu Primary School)

விண்ணப்ப முடிவுத் திகதி:
15.12.2002




# வடக்கு- கிழக்கு அபிவிருத்திக்கு ஜப்பான் முழு அளவில் உதவும்!

சமாதான நடவடிக்கைகள் மற்றும் வடக்கு, கிழக்கு அபிவிருத்திக்கு ஜப்பான் முழு ஒத்துழைப்பை வழங்கவுள்ளதாக ஜப்பான் அரசின் விசேட பிரதிநிதி யசுகி அகாஷி நேற்று கொழும்பில் நடத்திய செய்தியாளர் மாநாட்டில் தெரிவித்தார்.

நேற்று, வன்னியில் விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் 'சு.ப.தமிழ்செல்வனைச் சந்தித்த பின்னர் கொழும்பு திரும்பிய அகாஷி இச் செய்தியாளர் மாநாட்டை நடத்தினார்.

அடுத்த ஆண்டு இலங்கைக்கு உதவி வழங்கும் மாநாடு ஜப்பானில் நடக்கும் போது, இலங்கையின் சமாதான முயற்சிகளின் முன்னேற்றங்கள் குறித்தும் ஆராயப்படும் எனவும் அகாஷி குறிப்பிட்டார். சமாதானப் பேச்சுக்களின் போது பிரச்சினைகளும் எழலாம் எனினும் இருதரப்பும் அவதானமாக நடக்க வேண்டும் எனவும் யசுகி அகாஷி குறிப்பிட்டார்.

யசுகி அகாஷி ஜப்பானின் விசேட பிரதிநிதியாக இலங்கை வந்து, தற்போதய சமாதான நிலைமைகள் மற்றும் ஜப்பானின் நிதி உதவி தேவைப்படும் துறைகள் தொடர்பாக ஆராய்ந்தார். இவர், கம்போடிய சமாதான நடவடிக்கையில் ஈடுபட்டதுடன், 1996இல் ஐ.நா.வின் விசேட பிரதிநிதியாக பொஸ்னியாவிலும் பணியாற்றியவர் என்பது குறிப்பிடத்தக்கது. இலங்கை வந்த அகாஷி தலைமையிலான குழுவில் ஜப்பானிய வெளிவிவகார அமைச்சை சேர்ந்த மூவர், அபிவிருத்தி மற்றும் ஒத்துழைப்பு தொடர்பான ஆய்வுக்கான இரு அதிகாரிகள், ஜப்பானின் கொழும்புத் தூதுவர் ஆகியோர் இடம்பெற்றிருந்தனர்.

# வவுனியாவிலும் நேற்று கண்டனப் பேரணி

(வவுனியா நிருபர்)

தேசியத்தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனுக்கு உயர் நீதிமன்றம்- வழங்கிய 200 வருட சிறைத்தண்டனையை எதிர்த்து, வவுனியாவிலும் மாபெரும் கண்டனப் பேரணி நேற்று நடைபெற்றது. வவுனியா மத்திய மகாவித்தியாலயத்தில் ஆரம்பமான பேரணி மாவட்டச் செயலகத்தில் நிறைவுற்றது. இப்பேரணியில் பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள், அதிபர்கள் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்களான சிவசக்தி ஆனந்தன், இராஜ குகனேஸ்வரன், யாழ். பல்கலைக்கழக வவுனியா வளாக பீடாதிபதி பேராசிரியர் மோகனதாஸ், பொதுஜன அமைப்புக்கள் ஒன்றியத்தின் தலைவர் சதாசிவம் குலதேவராஜா ஆகியோர் உட்பட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

## சர்வதேச...

விருத்தி மற்றும் மீள்குடியமர்வு நடவடிக்கைகளுக்காகச் சர்வதேச சமூகம் பெருமளவு நிதியுதவியை வழங்குவதாக உறுதி வழங்கியுள்ளது. அமைக்கப்படவிருக்கும் நிதியம், உதவி வழங்கும் சில நாடுகளை அங்கத்தவராகக் கொண்ட அமைப்பாகச் செயற்படும். இந்நிதியத்தின் ஊடாகவே மேற்படி பகுதிக்கான அபிவிருத்திக்குரிய நிதி வழங்கப்படவுள்ளது.

தற்போது மேற்கொள்ளப்பட்டு வரும் சமாதான முயற்சிகளை ஊக்குவிக்கும் முகமாகவும், வெற்றியளிக்கும் முகமாகவும் சர்வசே சமூகத்தினதும், குறிப்பாக ஜப்பான் தேசத்தினதும் பங்களிப்பும், ஒத்துழைப்பும் முழுமையாக இருக்கும் என்றும் நம்புகிறோம்.

மேலும், வடக்கு கிழக்கு தமிழர் தாயகப்பிரதேசத்தில் யுத்தத்தால் கடந்த பல ஆண்டுகளாக அழிவுற்ற எமது தேசத்தைக் கட்டியெழுப்புவதற்கும், எமது மக்களின் வாழ்க்கை நிலையை மேம்படுத்துவதற்கும் குறிப்பாகக் கண்ணிவெடி அகற்றுவதற்கும் மற்றும் மீள்குடியேற்றம், மக்களின் அடிப்படை வசதிகளை கட்டியெழுப்புவது சம்பந்தமாகவும் ஜபபான் அரசு பெருமளவு உதவி வழங்குவதற்கு முன்வந்துள்ளது.

மேலும், எதிர்காலத்தில் நாங்கள் அமைக்கப்போகிற புனர்வாழ்வுப் பணிகளுக்கான இந் நிதியத்திற்கு பெருமளவு உதவிகளை வழங்க சர்வதேச சமூகம் முடிவு செய்துள்ளது. விசேடமாக ஜப்பான் தேசம் மேற்படி விடயங்களுக்காக விசேட பிரதிநிதி ஒருவரை நியமித்துள்ளது. அவர்தான் இங்கு வருகை தந்துள்ளார். அவர் மூலமாக, சமாதான முயற்சிகளுக்கும் அபிவிருத்தி, புனர்வாழ்வுப் பணிகளுக்கும் பெருமளவு உதவிகளை வழங்கவுள்ளதாக ஜப்பான் அரசு உறுதி வழங்கியுள்ளது.

இரண்டாம் கட்டப் பேச்சுக்களில் ஏற்பட்ட முன்னேற்றம் குறித்தும், எடுக்கப்பட்ட தீர்மானங்கள், முடிவுகள் குறித்தும் முக்கியமாக வடக்கு, கிழக்கு பிரதேசத்தில் எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படவிருக்கும் அபிவிருத்தி, புனர்வாழ்வுத்திட்டங்கள் குறித்தும்- என்னென்ன திட்டங்களை நாம் வைத்திருக்கிறோம் என்பதையும் அறிவதே ஜப்பானியத் தூதுக்குழுவின் முக்கிய நோக்கமாக இருந்தது. இவற்றை நாம் அவர்களுக்கு விளக்கமாக எடுத்துக் கூறினோம். எமக்குத் தமது ஒத்துழைப்புக்களை வழங்குவதாக அவர் எமக்கு உறுதியளித்தார். மேலும், புனர்நிர்மாணத்துக்கான உபகுழுவின கூட்டம் எதிர்வரும் பதினெட்டாம் திகதி நடைபெறவுள்ளது. இதற்காக அரசதரப்பிலும் எம்தரப்பிலும் அதற்கான தயார்ப்படுத்தல் வேலைகள் மிக வேகமாக நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

## உரத்துக்...

தாங்கிய அட்டைகளையும் பொது மக்கள் எடுத்துச் சென்றனர்.

அங்கு எழுப்பப்பட்ட மேலும் சில கோஷங்கள் வருமாறு:-

- 'தமிழீழத் தலைவனுக்கு சிங்கள தேசம் தண்டனையா?
- 'கெடுக்காதே! கெடுக்காதே! புரிந்துணர்வைக் கெடுக்காதே! குலைக்காதே! குலைக்காதே! சமாதானத்தை குலைக்காதே!'
- 'இத்தனை நாளும் தீர்ப்பு எங்கு மறைந்திருந்தது? நீதிமன்றத்திலா? பாராளுமன்றத்திலா?
- இருநூறு ஆண்டென்ன! இருநிமிடம் என்றாலும் தமிழன் பொறுக்க மாட்டான்!
- பயங்கரவாதத்திற்கு தூபமா? தேசியத்தலைவருக்க தண்டனையா?
- நவாலி சென்.பீற்றர்சில், நாகர் கோயில் பள்ளியில், செம்மணிப் புதைகுழியில், நரபலி எடுத்தவர்க்கு எத்தனை ஆண்டுகள் சிறை?
- உலகம் போற்றும் உத்தம தலைவருக்கா தண்டனை?
- தலைவருக்குத் தண்டனையா? தமிழீழ மக்களுக்குத் தண்டனையா?

(லி,111)

## யசுகி...

வரை நீடித்த இப்பேச்சுக்களில் தமிழ்ச்செல்வனுடன் அரசியல் துறையை சேர்ந்த தங்கன் மற்றும் ஜோர்ஜ் ஆகியோர் உடனிருந்தனர். ஜப்பானியக் குழுவில் அகாஷியுடன் கொழும்பிற்கான ஜப்பானிய தூதுவர் மற்றும் ஜப்பானிய அதிகாரிகள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

## நீதிமன்றத்...

ஆர்ப்பாட்டப் பேரணியை நடாத்தினர்.

நேற்றுக் காலை முதல் குடாநாட்டின் அனைத்துப் பகுதிகளிலிருந்தும் திரண்ட மக்கள், யாழ்.பல்கலைக்கழக முன்றலில் அலைஅலையாக வந்து ஒன்று கூடினர். சரியாக காலை 11.45 மணியளவில் கண்டனப் பேரணி ஆரம்பமாகியது.

யாழ்.மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றியத் தலைவர் சூ.சிறில ஆரம்ப உரை நிகழ்த்தி வைபவ ரீதியாக பேரணியை ஆரம்பித்து வைத்தார். இவ் ஆரம்ப வைபத்தில் இந்து குருமார்களும் உரையாற்றினர்.

தமிழீழ தேசியத் தலைவரின் பிரமாண்டமான உருவப்படம் முன்னே எடுத்துச் செல்லப்பட, அதனைத் தொடர்ந்து மதத்தலைவர்களும் பொது அமைப்புக்களின் தலைவர்களும் நகர்ந்தனர். இவர்களைத் தொடர்ந்து பாடசாலை மாணவர்களும், கல்வியியற் கல்லூரி மாணவர்களும், ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை ஆசிரிய மாணவர்களும் பல்கலைக்கழக மாணவர்களும் அணிவகுத்துச் சென்றனர். இவர்களைத் தொடர்ந்து அரசு,அரச சார்பற்ற ஊழியர்களும் பொதுமக்களும் நகர்ந்து சென்றனர். தொடர்ந்து முச்சக்கர வண்டிகளும் பேரணியில் சென்றன.

தலைவர் வே.பிரபாகரன் மீதான நீதிமன்றத் தீர்ப்பைக் கண்டிக்கும் வகையிலான வாசகங்களைக் கொண்ட பதாதைகளையும், சுலோக அட்டைகளையும் தாங்கியவாறு பலர் இப் பேரணியில் சென்றனர்.

இவற்றைவிட பாடசாலை மாணவர்களும் பொதுமக்களும் தமது கரங்களில் தேசியத் தலைவரின் உருவப்படங்களைத் தாங்கியவாறு ஆக்ரோஷமாக கோஷங்களை எழுப்பி ஆர்ப்பாட்டம் செய்தவாறு பேரணி நகர்ந்து சென்றது.

பல்கலைக்கழகத்திலிருந்து பலாலி வீதியூடாக நகர்ந்து இப் பேரணி, ஸ்ரான்லி வீதியூடாக யாழ். நகரின் மத்திய பகுதியை சென்றடைந்தது. அங்கிருந்து ஆஸ்பத்திரி வீதி வழியாக, கண்டி வீதியை அடைந்து, யாழ்.மாவட்ட அரச செயலகத்தை நண்பகல் ஒரு மணியளவில் அடைந்தது. பேரணியில் வந்த மக்கள் வெள்ளம் யாழ்.செயலகத்தை சனசமுத்திரமாக்கியது. நண்பகல் 1.15 மணியளவில் யாழ்.மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றியத் தலைவர் சூ.சிறில் தலைமையில் செயலகவாசலில் கண்டனக் கூட்டம் ஆரம்பமாகியது.

கண்டன உரைகளைத் தொடர்ந்து யாழ்.மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றிய பொதுச் செயலாளர் ப.கனகலிங்கம், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு சமர்ப்பிக்கப்படவிருந்த மகஜரை வாசித்தார். இதைத் தொடர்ந்து சூ.சிறில், மேற்படி கண்டன மகஜரை யாழ்.மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் து.வைத்திலிங்கத்திடம் கையளித்தார்.

மகஜரைப் பெற்றுக்கொண்ட மேலதிக அரசாங்க அதிபர் பதிலுரை நிகழ்த்தும் போது, நானும் ஓர் தமிழ் மகன். உங்களுக்கு இருக்கும் இந்த உணர்வு எனக்கும் உண்டு. எனவே இந்த உணர்வுடன் மகஜரைப் பெற்றுக் கொள்கிறேன்.

இவ் மகஜரை உடனடியாகவே பிரதமருக்கு தொலைநகல் மூலம் அனுப்பி வைக்கவுள்ளேன் என்றார்.

(க,லி,111)

## தீர்ப்பை மீளப்பெற...

எண்ணி வேதனைப்படுகின்றோம். வெட்கித் தலைகுனிகின்றோம். மேலும் சமாதானச் செயற்பாடுகள் கனிந்து வரும் இவ்வேளையில், சர்வதேச ரீதியில் புகழ்பெற்றுள்ள எமது தன்னிகரிலலாத் தலைவருக்கு எதிராகச் ஸ்ரீலங்கா நீதித்துறையானது வழங்கியிருக்கும் இத்தீர்ப்பால், நீதித்துறையையே உலகம் எள்ளி நகையாட வைத்துள்ளமை தெளிவாகின்றது. இப்படியான கேலிக்கூத்துக்களை வன்மையாகக் கண்டிப்பதோடு, இத்தகைய நடவடிக்கைகள், சமாதானச் செயற்பாடுகளை முற்றாகச் செயலிழக்க வைத்து விடும்.

போரினால் சிதைந்து போயிருக்கும் தமிழர் தாயகத்தின் போர் நெருக்கடிகளை முழுமையாகத் தணித்து இயல்பு நிலையைத் தோற்றுவிப்பதே ஸ்ரீலங்கா அரசினதும் தமிழீழ விடுதலைப்புலிகளினதும் உடன்பாட்டு விதிகளினதும் நல்லெண்ண நடவடிக்கையினதும் குறிககோளாகும். ஆனால் இந்த நீதிமன்றத் தீர்ப்பினால் இவை சிதைந்து போகாது, பத்திரமாக பாதுகாப்பதும் பேணிநடப்பதும் அரசின் தார்மீகக் கடமையென்பதை இச்சந்தர்ப்பத்தில் சுட்டிக்காட்ட விரும்புகின்றோம்.

இந்நீதிமன்றத் தீர்ப்பினால் வேதனைக்கும் மனக்குமுறல்களுக்கும் உள்ளாகியுள்ள மக்களின் உணர்வுகளுக்கு மதிப்பளித்து, தீர்ப்பை மீளப்பெறாத பட்சத்தில், நாடளாவிய மக்கள் போராட்டத்தை அரசு சந்திக்க வேண்டிய துர்ப்பாக்கிய நிலைக்கு தள்ளப்படும் என்பதை கோடிட்டுக் காட்டி மக்கள் பேரணியூடாக இந்த மகஜரை தங்கள் மேலான கவனத்திற்கு சமர்ப்பிக்கின்றோம் என்றும் அந்த மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(க,லி)

மக்கள் வங்கி
அனுசரணையுடன்
நமது ஈழநாடு நடாத்தும்
க.பொ.த.சாதாரண தரப் பரீட்சை
மாபெரும் கருத்தரங்கு — 2002
எதிர்வரும் 19ஆம் திகதி
காலை 9.00 மணி முதல் மாலை 4.00 மணி வரை
யாழ்.பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நடைபெறும்
என மகிழ்வுடன் அறியத் தருகின்றோம்.
இக் கருத்தரங்கில் பங்கு பற்றிப் பயனடைய, பரீட்சையில் தோற்றும் மாணவமணிகளை நாமும் வரவேற்கின்றோம்! வாழ்த்துகின்றோம்!!
அனுசரணை :-
மக்கள் மனமறிந்த வங்கி
மக்கள் வங்கி
மக்கள் வங்கியின்
மாணவர் மலர்ச்சி (சிசு உதான) கணக்குகள்

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 09.11.2002 அன்று அச்சிட்டு வெளியிடப்பட்டது.